
# காற்றுவெளி

நினைத்தபோது வெளிவரும் இதழ்
இதழ் 4, ஜுன் 07



அஞ்சலி

**திரு. வல்லிக்கண்ணன்**
12.11.1920 - 9.11.2006

**காற்றுவெளி**
இதழ் – 8
ஜூன் 2007
(நினைத்தபோது வரும் இதழ்)

ஆசிரியர்

**ஷோபா**

**தொடர்புக்கு**

R. MAHENDRAN
34 RED RIFFERD
PLAISTOW
LONDON E 13OJX
UK

**கணினி அச்சுக்கோர்ப்பு**

தருமஇரத்னகுமார்,
தமிழன் வரைகலையகம்,
29பி/6, மடம் தெரு,
காஞ்சிபுரம்.

**அச்சிடல்**

கவிக்குயில் அச்சகம்,
சென்னை – 5.

நிறையவே பேசவேண்டியிருக்கிறது.

ஈழத்து நூல் கண்காட்சிக்கு
ஒரு அறிமுகமாகவே
"காற்றுவெளி"
வெளிக்கொணரப்பட்டது.

தமிழகத்திலிருந்து
அச்சிடப்பட்டே எடுத்து வரப்பட்டு
வாசக ருக்கு அனுப்பப்பட்டன.

கிடைத்தவர்கள்
தகவல் இதுவரை தரவில்லை.

2006ல் நடத்தப்பட்ட கண்காட்சிக்கு
வரவேற்பு கிடைத்தது
ஒரு வெற்றிதான்.

இந்த ஆண்டும் தொடர்வோம்.

விமர்சனத்திற்கு
நூல்களை நேரடியாக அனுப்புங்கள்.

படித்து முடித்த நூல்களை அனுப்பி
(ஈழத்து) சன்மானத்தைப் பெறுங்கள்.

மீண்டும் சந்திப்போம்.

# குவியம்

தமிழில் 'மகிழினி'

ஷஷாங்க சீதாராம்

(கொங்கனி மொழி எழுத்தாளர். நாடகாசிரியர், சிறுகதை எழுத்தாளர், இயக்குநரும் நாடக நடிகருமாவார். வானொலி கலைஞராகவும், சமுக சேவகருமாக இருந்தவர் இவர். 'நபாத்' 'பிரசன' 'பரிஹ்' போன்றவை இவரின் படைப்புகள். சாகித்ய புரஸ்கர், பனாஜி, கோவாவின் கலா அகாடமி விருதுகள், குலகன் லெக்ஹான் புரஸ்கர், சாகித்ய அகாதமி போன்ற விருதுகள் பல பெற்றவர்)

**நாராயணன் சார் தன்னுடைய நாற்காலியில்** கண்மூடி உட்கார்ந்திருந்தார். கால்களை கைப் பலகைகளின் மீது வைத்திருந்தார். பலத்த எண்ணங்களால் சோர்வுற்றிருந்தார். தினசரியை எடுத்துப் படித்துப் பார்த்தார். அதன் மீது நாட்டம் ஓடவில்லை. சாய்வு நாற்காலியில் இருந்து எழுந்தவர், செருப்பை அணிந்து வெளியே வந்தார். முற்றத்திற்கு வெளியே பழத்தோட்டம் விரிந்திருந்தது. அதற்குப் பின்னால் மெல்லிய வயல்வெளியும் பச்சை போர்த்திய மலையும் தெரியும். நாராயணன் சார் வயல் வெளியின் ஒரு ஓரத்தில் அமர்ந்தார்.

குளிர்ச்சியான மென்காற்று வீசிற்று. வயல் வெளிகளில் அங்கங்கே தண்ணீரற்ற வெற்று நீர்த் தொட்டிகள் இருந்தன. சில சிறுவர்கள் உற்சாகமாக வயல் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

மேய்ந்து கொண்டிருந்த மாடுகளின் மேல் சிறு பறவைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. நாராயணன் சாருக்கு பெரிய கவலை அடித்து ஓய்வதாக இருந்தது. கிணற்று முனை ராட்டினமாய் எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தன.

"ஏன் எப்போதும் இப்படி நடக்கிறது? வேறு மாதிரி நடந்திருக்கலாம்? வேறுமாதிரிதான் நடந்திருக்க வேண்டும். ஏன் அப்படி நடக்கவில்லை? பாருங்கள் மனிதன் தான் நினைப்பது போல் நடக்க முடியவில்லை. நாம் நினைப்பது போலவே நிகழ்ச்சிகளும் நடப்பதில்லை. நான் உன்னைப் பற்றி இப்படிச் சிந்தித்ததே கிடையாது... நீ உதாசீனப்படுத்தி திருப்பியதற்காகக் கவலைப் படவில்லை. அப்படி திருப்பியதற்காக நீ சொன்ன காரணம் தான்... அப்படியான ஒரு காரணத்தை நீ கூறியிருக்கக் கூடாது... என்னுடைய 'அனு'வை திருப்பியதற்கு உன்னுடைய பெற்றோரை ஒரு காரணமாகக் கூறி நீ வாதித்ததைத்தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... நான் உன்னிடம் எதிர் பார்த்தது வேறு. உன்னுடைய எழுத்துக்கள்... உன் படைப்பில் வெளியான உன் சிந்தனைகள்... உன்னுடைய 'சுய' எண்ணங்களின் வலிமை வெளிப்பட்ட எழுத்துககள்... உன்னோடு நாடகங்கள், இலக்கியம் என பலதையும் பேசியிருக் கிறேன்... உன்னை நான் சமமாகவே மதித்து வந்தேன். ஏன்? என சிந்தனையும் உன் சிந்தனையும் ஒரே தளத்தில் இருந்ததுதான்... ஆனால் இப்போதுதான் தெரிகிறது அந்தச் சிந்தனைகள் பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட பிள்ளையாரைப் போல யாரும் வணங்க அருகதை யற்றது என்பதை... ஒருவன் தன்னைத்தானே அவமதித்துக் கொள்ளக்கூடாது.

சில காற்றாடிகள் வானில் நடனமாடின. திடீரென ஒரு காற்றாடி சுழன்று சுழன்று கீழிறங்கிறது. சமாளித்து தனக்கென தனிப் பாதை கண்டு மேலேறி வட்டமிட்டது. அந்தக் காட்சி 'கிர்கிச்சா' என்ற பறவையின் செயல் போலவே இருந்தது. "உனக்கு நினைவிருக்கிறதா, சுதாகா தன் மனைவியைததளளிவைததபோது எவவளவு பேசினோம்?

அந்தச் சம்பவத்தைப் பற்றி நீ கூறியது எவ்வளவு பாராட்டத்தக்கதாய் இருந்தது? நாம் சுயநலக் காரர்கள். மிகவும் சுயநலமிக்கவர்கள். மற்றவர் களின் கவலைகள் மலையளவு இருந் தாலும் நம் கவலைகள்தான் மிகப் பெரியது. அதைத்தாண்டி சிந்திக்கத் தெரியாதவர்கள். கடைசியில் சுதாகர் தன் மனைவியைப் பிரிந்து விட்டான்... அவள் உடம்பில் அங்கங்கே இருந்த வெள்ளைத் தேமல்கள் அவளைப் பிரித்து வைத்து விட்டது... அவனுடைய குடும்பத்தில் யாருக்காவது, ஏன் அவனுக்கே இருந்திருந்தால் என்ன செய்வான்?. வராது என்பதற்கு அவன் உறுதி தரமுடியுமா? வந்தால் என்ன செய்வான்?... இந்த வார்த்தை களை அன்று நீ பேசினாய். இன்று 'அனு'வுக்கு தேமல் வந்தபோது உன்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இப்போது உனக்கு அவள் பிடிக்க வில்லை. இப்படித்தான் நிகழும்... இப்படியே தான் நிகழ வேண்டும்."

நாராயணன் சார் தனக்குத்தானே சிரித்துக் கொண்டார்.

"அனுவுக்கு என்ன குறைச்சல், என்ன இல்லை?"

அனு நிராகரிக்கப்பட்டது அவருக்கு கவலையை ஏற்படுத்தவில்லை. அவர் கவலை வேறு விதமானது.

காற்றாடிகள் பறந்து கொண்டிருந்தன. சில மரம் ஏறும் குரங்கைப் போல் தாவித் தாவி ஏறிக் கொண டிருந்தன. நாராயணன் சார் நீண்ட நேரமாகக் காற்றாடிகளைப் பார்த்தபடி இருந்தார். தன் 'மனசு'தான் அங்கே பறந்து கொண்டிருக்கிறது என நினைத்தார்.

நாராயணன் சார் கடந்த நான்கு நாட்களாக 'மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சார'ச் சுற்றுப் பயணத்தில் இருந்தார். பழக்கத்தின் காரணமாக விட்டுப் போன நான்கு நாள் தினசரிகளை ரொம்பவும் இப்போது கூர்மையாகப் படித்துக் கொண்டிருந்தார். ஒரு தினசரியில் அவருடைய நிகழ்ச்சியைப் பற்றி செய்தி வந்திருந்தது. "ஸ்ரீ நாராயணன் சார், இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். அதுமட்டுமல்ல நன்கு அறியப்பட்ட நாடக நடிகரும் திறமைமிக்க இயக்குநரும் ஆவார். அவர் தற்போது தன் நாடகங்களை பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் கொண்டு சென்று கொண்டிருக் கிறார். நாராயணன் சாரின் திறமையான இயக்கமும், இளைய நடிகர்களின் அற்புத ஒத்துழைப்பும் பார்வையாளரிடையே பலத்த வரவேற்பைப் பெற்றுத் தருகிறது.

"நாராயணன் சார் எந்த மதத்திலும் இருக்கிற மூடநம்பிக்கைகளை, அதை நோக்கித் தள்ளுகிற சக்திகளை இனங்கண்டு அதற்கெதிரான தன் கருத்துக்களைப் பலமாக தன் நாடகங்கள் மூலம் முன்வைக்கிறார். பல்வேறு மூட நம்பிக்கைகளைக் குறிப்பிட்டு அதைப் பற்றி பார்வையாளர்களைச் சிந்திக்க வைக்கிறார். கிரகங்களின் தீமைக்குப் பயந்து செய்யும் பரிகாரம், ஆவியை விரட்ட கட்டப் படும் மந்திரித்த தாயத்து, ஜோசியர்கள் போட்டுக் கொடுத்தபடி செய்கிற காரியங்கள், சகல துன்பங் களையும் விரட்ட ஆற்றப்படும் சுவிசேஷக் கூட்டங்களில் முண்டியத்தபடி உருகி வேண்டும் வேடிக்கை, தலைமீது சாமி தூக்கி வருபவரின் காலில் விழுந்து உருண்டு வேண்டும் நிலை, சகல வியாதிகளுக்கும் ஒரே மருந்தாக மந்திரித்த சாம்பல் விபூதியைப் பூசிக் கொள்ளுதல், எந்த முடிவாக இருந்தாலும் குறி சொல்பவன் முன் குந்திக் கொண்டு அவன் சொல்வதையே சிரமேற் கொண்டு செய்வது – இதைப் போன்ற எண்ணற்ற மூடநம்பிக்கைக் கருத்துக்களை மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் பிட்டு பிட்டு வைக்கிறார்."

"தொழில் நேர்த்தி நிறைந்த, கிட்டத்தட்ட 15–16 இளைஞர்கள், யுவதிகளால் இந்த நாடகம் நடத்தப்படுகிறது. இந்த இளைஞர் பட்டாளம் ஒளியையும், ஒலியையும் குழைத்து அற்புதமாக நாடகத்தைப் பார்வையாளர்கள் மத்தியில் இருக்கிற மூட நம்பிக்கைகளின் தீமைகளை எளிதாக எடுத் துரைத்து அவர்களின் மனங்களைக் கவர்கிறது.

இந்த நாடகம் நாம் எவ்வாறு தினசரி வாழ்க் கையில் சிக்கல் மேல் சிக்கலை மூட நம்பிக்கை யால் உருவாக்கிக் கொள்கிறோம், இருக்கிற சிக்கலைத் தீர்க்காமல் மூட நம்பிக்கையினால் எவ்வாறு சிக்கலை மேலும் இறுக்கிக் கொள் கிறோம் என்பதை அழகாக வெளிப்படுத்துகிறது."

நாராயணன் சாரின் மனைவி ஒரு கோப்பை யில் தேநீருடன் வந்தாள். "முதல்ல டீயைக் குடிங்க" என்றாள். "ஊம்" என்றவாறு பேப்பரில் மூழ்கிக் கிடந்தார் நாராயணன் சார். "டீ ஆறுதுங்க", அவர் மனைவி அவசரப்படுத்தியும் வைத்த கண்

வாங்காமல் தினசரியையே பார்த்துக் கொண்டிருந் தார் அவர். பொறுமையிழந்த அவள் சற்றே உரத்த குரலில், "டீயைக் குடிங்க இப்ப" என்றதும் நாராயணன் சார் எடுத்துப் பருகினார். "உங்க நாடகத்தைப் பத்தி என்ன பேசிக்கிறாங்க?" என்று வினவினாள்.

பதிலாக ஒரு கனைப்பு கனைத்து விட்டு மீண்டும் தினசரியில் மூழ்கிப்போனார். அவளைத் துளைத்துக் கொண்டிருக்கும் சங்கதியை அவளால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"அந்த எல்லம்மா எல்லாத் தோல் வியாதியையும் சரி பண்றாலாம்" என்றாள்.

"எந்த எல்லம்மா...?" நாராயணன் சார் பேப்பரைத் தாழ்த்தியபடி கேட்டார்.

"அதாங்க காபித் பேட்டை எல்லம்மாங்க.. தேவி எல்லம்மாப் படத்தத் தூக்கிட்டு தெருத் தெருவா வருவாளே ஒரு பொம்பள அவதான்.. நேத்து இங்க வந்திருந்தா, அனுவுக்கு குங்குமம் கொடுத்துட்டு சொன்னா, "தேவி எல்லம்மா இவமேல கோவமா இருக்கா அதனால இவ மண வாழ்க்கையில பிரச்சினை ஏற்பட்டிருக்குது"ன்னு சொன்னாங்க"

"வேற இன்னா சொன்னா?"

"அனு தெரியாமலே எல்லம்மாவ அவமதிச் சிட்டாளாம்"

"உனக்கு யார் இதச் சொன்னது"

"அனுவே சொன்னாங்க. ஒருவாட்டி சின்ன பிள்ளையா இருக்கறப்போ விளையாட்டுக்கு குறுக்க வந்த எல்லம்மாவத் திட்டிட்டாளாம். அப்பவே அந்தத் தழும்புங்க வந்துடிச்சாம் அவளுக்கு..."

"குழந்தங்க திட்டக்கூட பொறுக்க முடியாத கடவுள் என்ன கடவுள் அது? ஏன் எப்பவும் இதப் பத்தியே சொல்லிக்கிட்டு கெடக்கற?" பின்ன எப்படி இந்த வடு சமாச்சாரம் எல்லம்மாவுக்குத் தெரிஞ்சுது? நாமளா சொன்னாலொழிய வேற யாருக்கும் தெரியாத எடத்துல அது இருக்கும்போது எப்படி அவளுக்குத் தெரியும்?"

"சரி! நாங்கதான் சொன்னோம். இத குணப் படுத்த ரெண்டு வருஷம் ஆவுமாம். எனக்கு இவங்களப்பத்தி நல்லாத் தெரியும். தம்மாத்துண்டு விபூதியைக் குடுத்து இதப் பூசு எல்லா வியாதியும் சரியாயிடும்னு ஏமாத்துவாங்க. இந்த ஊர்ல எவனுக்காவது விபூதி பூசி மட்டுமே நோய் குணமாயிருக்கான்னு காட்டு பாப்பம்."

"நீங்க உங்க கருத்தையேதான் பேசிக் கிட்டிருப்பீங்க. நான் எதாவது சொன்னா எடுப்பு எடுக்கிறது? கடவுள் நம்பிக்கையில ஏதாவது சொன்னா ஏன் ஒத்துக்க மாட்டன்றிங்க?"

நாராயணன் சாரின் மனைவி பினாத்திக் கொண்டே சென்றாள்.

"நம் அனு வயசுப் பசங்க எல்லாம் ரெண்டு மூனு பசங்களப் பெத்துடுதுங்க. உங்களுக்குக் கவலையே இல்ல. உங்கப் பொண்ணு உடம்புல இருக் கிற தேமலை சொல்லிட்டேன்னு அப்படி ஆடறீங்களே? என்ன நெனச்சிக்கிட்டிருக் கிறீங்க? பூமியில கடவுளோட தூதருங்க இருக்க றாங்க. ஏன் அவங்ககிட்ட போய் சொல்லக் கூடாது? நாம எதாவது பரிகாரம் சொன்னா முளை யிலேயே கிள்ளிட வேண்டியது. நான் இப்பச் சொல்றன், நாம எல்லம்மாவ நம்பி வைத்தியம் பண்ணிக்கிட்டா கண்டிப்பா குணமாயிடும். டாக்டருங்கள நீங்கதான் மெச்சிக்கணும். இந்த டாக்டர், அந்த டாக்டர்ன்னு பாக்காத வைத்தியம் உண்டா? எந்த மருந்து கேட்டிச்சு சொல்லுங்க... மூலிகை வேரு எத்தினி பாத்தாச்சி? மூலிகையை நம்புவாராம்? கடவுள நம்ப மாட்டாராம். நம்ப அனு ஒன்னும் கொழந்த இல்ல தெரிஞ்சுக்கோங்க..."

நாராயணன் சாருக்கு அவர் மனைவியின் இந்த அங்கலாய்ப்பு ஒன்றும் புதியதில்லை. மாசத்திற்கு இரண்டு முறையாவது இந்த பழைய பல்லவியை அவர் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார். இந்த அங்கலாய்ப்பினால் அவள்மீது அவருக்குக் கோபமில்லை. அவளை தன் கருத்திற்கு கொண்டு வந்து யோசிக்க வைக்க முடியவில்லையே என்பதற்காகத்தான் வருந்து வார். மீண்டும் தன்னுடைய தினசரிக்குத் திரும்பி னார். பஞ்சாபில் 15 பேர் கொல்லப்பட்டனர் — பஞ்சாபில் 4 தீவிரவாதிகள் கைது — பீகாரில் படகு கவிழ்ந்து 200 பேர் மூழ்கினர் — ஈரான் ஈராக் தற்காலிகப் போர் நிறுத்தம் — 'வாஸ்கோவில்' கற்பழிப்பு இளைஞர் கைது — திருமணமாகாத பெண் தற்கொலை. நேற்று 31 வயதான 'இளங் கன்னி' பாழும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். அவர் ஒரு பள்ளி ஆசிரியை

யாகப் பணியாற்றியவர். இது அவருடைய இரண்டாவது தற்கொலை முயற்சி. நடக்க இருந்த திருமணம் தள்ளிப்போனதால்தான் இந்த முடிவுக்கு வந்தாள் என அவருடைய சுற்று வட்டத்தார் தெரிவித்தனர். நாராயணன் சார் தினசரியைக் கீழே வைத்துவிட்டு தன் கண்ணாடியைக் கழற்றினார். "எவ்வளவு காலம் அவ காத்திருப்பா?"அவளும் பெண்தானே?..." இந்த வரிகள் அவர் காதுகளை வளைய வந்தன.

எதனாலோ கலைக்கப்பட்ட எறும்பு வரிசையாய் எண்ணங்கள் சிதறின. தினசரியில் தற்கொலை செய்து கொண்ட பெண் அவர் மனம் முழுவதும் ஆக்கிரமித்தாள். சொல்ல முடியாத துயரைச் சுமந்து முற்றத்தில் வருகிறாள். வயலகளைக் கடந்து சேற்றுமடையில் அமர்கிறாள்.

பறந்து கொண்டிருந்த காற்றாடியில் ஒன்று திடீரென அறுந்து சறுக்கியபடி கீழிறிங்கிற்று. ஒரு பையன் ஓடி அது வீழ்வதற்குள் பிடித்து இழுத்து சரி செய்தான். நாராயணன் அமைதியாக இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பையன் பட்டத்தைத் தட்டி எழுப்பி மீண்டும் பறக்க விட்டான். அது மீண்டும் அறுந்து கீழே மிதந்து வந்து கொண்டிருந்தது. மீண்டும் மீண்டும் இதே கதைதான். இந்த முறை பட்டத்தைப் பறக்க வைத்ததும் அது வானில் நடனமாடிவிட்டு அறுந்து குடிகாரனைப் போல தள்ளாடி தரையிறங்கிற்று. இந்த முறை பையன் அசைய வில்லை. நாராயணன் சார் தன்னுடைய உயர்ந்த இடத்திலிருந்தவாறே பார்த்துக் கொண்டிருந்தார்.

தொலைக்காட்சியைப் போட்டதும் திரையில் ஒரே சீலிங் பேனில் தூக்கில் தொங்கிய மூன்று சகோதரிகளின் உடல்கள் காட்டப்பட்டன. இந்தக் கொடுமையான சோகத்தால் தாக்கப்பட்டு உணர்ச்சியற்ற நிலையில் அவர் தந்தை பேசிக் கொண்டிருந்தார். "இந்தக் கொடூரத்தை நாங்க கனவில் கூட எதிர்பார்க்கவில்லை." கேள்விகள் குழப்பமாகக் கேட்கப்பட்டன. பதில்களும் அதற் கேற்ப குழப்பத்துடன் வெளிப்பட்டது. இந்த சோகத்திற்குப் பின்னால் இருந்த உண்மைக் காரணம் வரதட்சணைதான். "இது தவிர பிற காரணங்களும் இருந்தன." "5000 ஆண்டு பழைய வழக்கம்." "பெற்றோர் இடையே போதிய கருத்தொற்றுமை இல்லாததும் காரணம்" "சுயமாக முடிவெடுத்தலும் தன்னம்பிக்கையும்".

தொலைக்காட்சியில் கூறப்பட்ட காரணங்களுடன் நாராயணன் சாருக்கு உடன்பாடு உண்டு என்றாலும், தொலைக்காட்சியில் காட்டப்பட்ட தந்தையைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. அந்தக் கேள்விகள் தன்னைக் கேட்பது போல் உணர்ச்சி வசப்பட்டவர் "இப்படிப்பட்ட கொடூரமானது நிகழும் என்று எங்கள் கனவிலும் நாங்கள் நினைத்துப் பார்த்ததில்லை..." இந்த வார்த்தைகள் கற்களைப் போல சரமாரியாக செவிப்பறையில் மோதிச் சிதறுகின்றன.

புதிய சங்கடம் அவருள் தோன்றி படுத்தியது. தொலைக்காட்சியில் காட்டப்பட்ட தந்தை மறுநாளும் நினைவிலிருந்து போக மறுத்தார். நேற்று தொலைக்காட்சியில் செய்தியைப் பார்த்தியா என்று வேண்டுமென்று அனுவிடம் கேட்டார். "கொஞ்சங் கூட யோசிக்காம எப்படி முடிவெடுக்கறாங்க ஜனங்க..? கொஞ்சங்கூட சிந்திக்காத செயல் இது. ரொம்ப அதிர்ச்சியாய் இருக்குது. ஏதோ அவங்க அப்பாவுக்கு நல்லது செய்றதா நெனச்சிட்டு இத செய்திருக்குதுங்க. அவங்க அப்பாவுக்கு எவ்வளவு அதிர்ச்சியாய் இருக்கும்?" அவர் பேசும்போது மூச்சுத் திணறி எப்படிப் பேச முடியாமல் வாடி இருந்தார் பாத்தியா?"

"இந்தப் புள்ளங்க எல்லாம் படிச்சதுங்க.. அதுல ஒருத்தி வேலை செய்றாளாம். அவங்களுக்கு திருமண வயசுகூட இல்ல. ஐயோ என்னால நெனச்சிக் கூடப் பாக்க முடியல."

"அப்பா தற்கொலையப் பத்தி விமர்சிக்கிறது சரியில்ல. தற்கொலை பண்ணிக்கிறவங்களோட வலியையும் வேதனையையும் மத்தவங்களால புரிஞ்சிக்க முடியாது. அதனாலதான் அப்படி ஒரு முடிவுக்கே அவங்க வராங்க.."

நாராயணன் சார் அனுவை சந்தேகத்தோடு பார்த்தார்.

"நல்லா ஞாபகம் வெச்சுக்கோ...தற்கொலை சிந்திக்காம எடுக்கற முடிவு. கோழைத்தனம். அது என்னைக்கும் பிரச்சனைக்கு முடிவாயிடாது... சிந்திக்கத் தெரியாதவனும் தன் கடமையைச் செய்யத் தெரியாதவன்தான் அப்படி ஒரு முடிவை எடுப்பான்."

"நீங்க சொல்றது சரிதான், ஆனா அந்த நேரத்துல பின்விளைவைப்பத்தி யோசிக்கிற நிலையோ, மனக்கட்டுப்பாடோ, பகுத்தறிவோ இருக்காதுப்பா.."

"சரி,அதவுடு. உங்கம்மா ஏதோ எல்லம்மா பத்தி சொல்லிக்கிட்டிருந்தா. அவ குணப்படுத்தறாளாம்.

நாராயணன் சார் அனுவிடம் எதிர்வினையை எதிர்பார்த்திருந்தார். "ஆமா அப்பா..." அவ வாய் திறந்து கொட்டினாள். "அந்த வைத்தியத்தால எவ் வளவோ பேருக்கு குணமாயிருக்காம்... கடைசி சிலவார்த்தைகளில் அவளின் ஆர்வம் மறைந் திருந்தது. ஒரு நீரோடை குட்டையில் கலப்பதான துள்ளலைப் போல இருந்தது. "உனக்கு விருப்பம் இருந்தா 'கபி' குப்பத்துக்கு வந்துரு. வைத்தியத்த ஆரம்பிச்சிடலாம்னு சொன்னாப்பா."

அனு இதை நீண்ட நிறுத்தத்திற்குப் பிறகு சொன்னாள் கால் கட்டை விரல்களைப் பார்த்த படியே.

நாராயணன் சார் எதுவும் சொல்லவில்லை. ஒரு பெருமூச்சு விட்டார்.

'அனு' இந்த விவாதத்தை மேலும் தொடர விரும்பவில்லை. நாராயணன் சார் மூச்சுவிடச் சிரமப்பட்டு எழுந்து அசைந்து உட்கார்ந்தார். எல லம்மாவைப் பற்றி பேச 'அனு' நாளை வருவாள். யாரெல்லாம் எல்லம்மாவால் குணமானவர்கள் என்று சொல்வாள். தானும் வைத்தியம் செய்ய இருப்பதாக அனுமதி கேட்பாள். நாராயணன் சாரால் நாளை வருவதை முன் கூட்டியே உணர முடிந்தது. "என்னால் ஏன் அவளைத் தடுக்க முடியவில்லை?" நாராயணன் சாரால் இதற்கு விடையளிக்க முடியாமல் மன அமைதி இழந்தா.

கைப்பலகையில்வளைந்திருந்த ஆணியை தேய்த்துக் கொண்டு இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து அவர் அமர்ந்திருந்த கட்டைப் பலகையில் வட்ட வட்டமாய்ச் செதுக்கப்பட்டிருப்பதைப் பாத தார். வட்டங்கள்... குவியங்கள்... சுற்று வட்டம்... அவ ருடைய எண்ணம் முழுவதும் வட்டங்களால், மையங்களால் நிரப்பப்பட்டது... என் வட்டம்... அனு வின் வட்டம். என் குவியம் அனுவின் மீது. அனு வின் குவியம் அவளின் திருமணத்தின் மீது. எல் லாச் சுற்று வட்டங்களும் ஒன்றையொன்று இணைத்துக் கிடப்பன. ஒவ்வொன்றுக்கும் தனி யான மையமுண்டு. சிலசிறியவை. சில பெரியவை.

அவர் தனக்குத்தானே சிரித்துக்கொள்ளத் துவங்கினார்.

■■■

## இனி வருமா!?

கூட்டு
அணி அமைக்க

எட்டிப் பார்த்தார்

'ஏழைத்' தாண்டி
எழாது என்றார்
கிட்ட இருந்தவர்

கிட்டாதெனவே
எட்டி இருந்தவரின்
இழுப்புக்கு
இறங்கினார்.

எட்டியது
மூன்று ஐந்து
எட்டு என கூட்டு

ஏழுடன்
அரை சேர்த்து
ஒழிந்து போ என்றார்
ஓய்வறியா பதவியா்.

எண்களின்
கூட்டணி
எண்ணிக்கை
கூட்டணி

எல்லாம் கிடக்கட்டும்

விரல் நுனியில்
நீளும்
கறுப்புக்கோட்டுக்கு

இனி வருமா
வெளிச்சம்...?

**- அமுதகீதன்**
திம்மராசாம்பேட்டை,
காஞ்சிபுரம் மாவட்டம்.

## ஆயுத இரவுகளின் அத்தியாயம் ஒன்று

இரவுகள்
எமது தேசங்களில்
கடினமானவைதான்...
பயங்கரமாகத்தான் இருந்தன...
இப்பொழுதும்.

ஊளையிடும் நாய்களும்
ஊமைக் கரையாயிற்று...
இருக்கும் பொழுதுகளில்
காற்று மட்டும்
எப்படிப் பேசும்...?

காற்றுக்களின் சுதந்திரமும்
விலங்கிடப்பட்டிருக்கின்றன
சுதந்திரத்தை மறுத்து
பிணவாடை பூசப்பட்டிருக்கிறது

மனிதன் உயர்ந்தவன்
உயர்திணை
எமது தேசத்தைத் தவிர

இங்கு தெருச் சடலங்கள்
நாய்களுக்கும்...
காகங்களுக்கும்...

தெருக்களிலும் பற்றைக் காட்டிலும்
மனித விருந்துபசாரம்.

இதன் பயனாக
இரவுகள் மட்டும்
எப்படித் தூங்கும்?
கண் விழித்து
துப்பாக்கிச் சன்னங்கள்
கொறித்துத் தின்கின்றன.

**- பொத்துவில் தாஜகான்.**

## ஒரு பெண்ணியம் பேசுகிறது

கனவுகள்
ஒவ்வொன்றும்
தேய்பிறையாகி
வாழ்வின்
ஒவ்வொரு முடிச்சுகளும்
ரணங்களுடன்
ஒரு புல்வெளியில்
தொங்கி நிற்கின்றன.

நகர்வுகளும்
இருப்புகளும்
வன் பாறைகளில்
மோதுகையில் ஆட்பட்டு
கரைந்த சித்திரமாயிற்று

சிந்தனைகளும்
சுதந்திரமும்
முக்காட்டுக்குள்
எரிமலையாய்...

எல்லையில்லா
வாழ்வின் கோணங்கள்
மனதினுள் மாத்திரம்
வௌவால்களாய்
தொங்காட்டமிடுகின்றன.
எக்காலம்
எமது விடிவுகள்
நன்றாய்ப் புலரும்.

**- பொத்துவில் தாஜகான்.**

# பின்தொடரும் திரிபுகளின் குரல்

## விமல்

திருக்கழுக்குன்றத்துக்காரரான விமல் என்கிற விமல விநாயகம் தற்போது வசிப்பது உத்திரமேரூரில். எப்போதேனும் அபூர்வமாய் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதுகிற விமலின் ஆர்வங்களும் ஈடுபாடுகளும் எழுத்து, வாசிப்பு, விமர்சனம், தொழிற்சங்கம், எனப் பலதரப்பட்டன. தற்போது இவர் அதிக கவனம் கொள்வது நாட்டார் வழக்காற்றியல் துறையில். அது சார்ந்து இவர் எழுதிய குறிப்பிடத் தகுந்த கட்டுரை இது.

**'கலாச்சார வளங்களை உடையவர்கள்** விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டு ஆதிக்கவாதிகள் தம்மை கலாச்சாரங்களுக்கு உரியவர்களாகக் காட்டிக் கொண்டார்கள். பாவனை செய்தவர்கள் பண்பாளர்கள் ஆக, பண்பாடு காத்தவர்கள் காட்டு மிராண்டிகளானார்கள். வரலாறு இப்படித்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது" என்று "கதாசாகரம்" நூலின் முன்னுரையில் சா.தேவதாஸ் குறிப்பிடு கிறார்.

ஒளிந்து கொண்டிருக்கும் வரலாற்றை வெளிச் சத்துக்குக் கொண்டு வருவதில் நாட்டார் வழக் காற்றியல் ஆய்வுகள் ஓரளவு துணை நிற்கின்றன. நாட்டார் வழக்காறுகளில் ஒன்றான வரலாற்றுக் கதைப்பாடல்களில் வரும் கதைகள் பல வடிவங் களாகத் திரிபடைந்துள்ளன.

இப்படிப் பின் தொடரும் திரிபுகளில் ஆதிக்கச் சாதியினரின் ஆத்ம தரிசனங்களைக் காணலாம். தூங்குபவன் தொடையில் திரித்த கயிற்றில் தூங்கு பவன் கழுத்தையே இறுக்குவது போன்ற திரிபு களை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

உதாரணத்திற்கு முத்துப்பட்டன் கதையைப் பார்ப்போம். தென்பாண்டி மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் கொடை விழாக்களின்போது நிகழ்த்தப்பெறும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் எடுத்துரைக்கப் படும் கதைகளில் முத்துப்பட்டன் கதையும் ஒன்று. கதைப்பாடலின்படியுள்ள கதையை முதலில் காண்போம். ஆரிய நாட்டில் அந்தணக் குடும்பத் தில் ஏழு சகோதரருக்குப் பின் எட்டாவதாகப் பிறந் தவன் முத்துப்பட்டன். தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து கொட்டாரக் கரைக்குச் சென்று இராம ராஜன் என்ற சிற்றரசனிடம் பணிபுரிகிறான். அவன் வாலப்பகடை என்ற சக்கிலியனின் மகள் களான பொம்மக்கா, திம்மக்கா இருவரையும் காதலிக்கிறான். ஆரம்பத்தில் சினங்கொள்ளும் வாலப்பகடை மனம் முடித்து வைக்க சில நிபந் தனைகளை விதிக்கிறான்.

"நாறபது நாளைக்குள் முப்புரி நூலும் குடுமி யையும் அறுத்தெறிந்து எங்களைப் போல ஒப்புடன் நீர் செருப்புக் கட்டி வந்தால் எப்படியாகிலும் மக்களைக் கட்டித் தாரேன்" என்று சொல்லுகிறான். முத்துப்பட்டனும் நிபந்தனைகளை ஏற்கிறான். செய்தியறிந்த அவன் தமையன்மார்கள் அவனை ஒரு கல்லறையில் அடைக்கின்றனர். அங்கிருந்து முத்துப்பட்டன் தப்பிச் சென்று சந்தையில் தோல் வாங்கிச் செருப்பு தைத்துக் கொண்டு, நடுவழியில் குடுமியைச் சிரைத்து, பூணூலை அறுத்து நாலு திசைக்கும் எறிந்து விட்டு வாலப்பகடையின் வீட் டுக்குப் போகிறான். வாலப்பகடையும் முத்துப் பட்டனுக்கு முறைப்படி தம் மக்களை திருமணம் செய்து வைக்கிறான். பின்னர் முத்துப்பட்டன் ஆநிரை மீட்கச் செல்லும் போது சூழ்ச்சியால் கொல்லப்படுகிறான். பொம்மக்காவும், திம்மக்காவும்

தீப்பாய்ந்து உயிர் விடுகின்றனர். பின்னர் வழிபாடு பெறுகின்றனர்.

அடுத்து முத்துப்புலவர் என்னும் வில்லுப் பாட்டுப் புலவர் பாடிவரும் கதையைக் காண்போம்.

பிராமணர் வீட்டில் பசுவொன்று இரவோடு இரவாக எருக்குழிக்குள் விழுந்து இறந்தது. காலையில் பசு இறந்ததைக்கண்ட அவர் பாவத்தைத் தொலைக்கக் காசிக்குப் போய் விட்டார். அவர் மனைவி பாவம்தீர உபவாசங்களிருந்து சிவபிரான் அருளால் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். இவற்றைத் தான் வளர்த்தால் ஊரார் பழி தூற்றுவார்கள் என்று காட்டில் விட்டு விடுகிறாள். காட்டில் ஒரு நாகம் குழந்தைகளைக் காப்பாற்றிற்று. வாலப் பகடையும் அவள் மனைவியும் அவ்வழி போகும்போது குழந்தைகளைக் கண்டெடுத்து வளர்த்தனர். இந்தக் கதையின்படி முத்துப்பட்டன் மணம் புரிந்த பெண்கள் இருவரும் சக்கிலியர்கள் அல்ல என்று நிறுவப்படுகிறது.

இதுபற்றி பேராசிரியர் நா.வானாமாமலை அவர்கள் முத்துப்புலவரைச் சந்தித்துக் கேட்டபோது அவர் வெளிப்படையாக உண்மையைச் சொல்லி விட்டார். அவருக்கு முன் அவருடைய தகப்பனாரும், அவருக்கு முன் அவரது பாட்டனாரும் வில்லுப்பாட்டு பாடி வந்தார்களாம். அவர்கள்தான் பட்டவராயன் கோவிலுக்கு வழக்கமாக வில்லடிக்கப் போவார்களாம். மூவரும் பொம்மக்காவும், திம்மக்காவும் வாலப்பகடையின் மக்களென்றே பாடி வந்திருக்கிறார்கள். ஆனால் 25 ஆண்டுகளுக்கு முன்னால் சில பிராமணர்களும், உயர்சாதிக்காரர்களும் கதையை ஆட்சேபித்தார்களாம். சொரிமுத்து ஐயர் கோவிலுக்கு மேல் சாதிக்காரர்கள் அதிகமாக வருவதால் இக் கதையை மாற்ற வேண்டுமென்றெண்ணி முத்துப் புலவர் அவ்வாறே மாற்றி விட்டாராம். உண்மையில் பொம்மக்காவும், திம்மக்காவும் சக்கிலியப் பெண்களே என்று அவர் கூறுகிறார்.

அடுத்ததாக மதுரைவீரன் கதையைப் பார்ப்போம்.

மாதிகச் சின்னான் என்ற சக்கிலியனின் மகன் வீரன். கன்னிமாடக் காவலுக்குச் செல்லும் போது அவனுக்கும் இளவரசி பொம்மிக்கும் காதல் மலர்கிறது. மன்னன் பொம்மண்ண நாயக்கரின் படையை வென்று பொம்மியைக் கைப்பிடிக்கிறான். அவனது வீரத்தை மெச்சி திருச்சியை ஆண்ட விஜயரங்க சொக்கலிங்கன் வீரனை படைத் தலைவனாக்குகிறான். பின்னர் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனின் வேண்டுகோளை ஏற்று கள்வர்களை அடக்க மதுரைக்குச் செல்கிறான். கள்வர்களை அடக்கி மதுரை வீரனாகிறான். அப்போது தாதியர்களின் தலைவி வெள்ளையம்மாளைக் காதலிக்கிறான். சூழ்ச்சியால் மாறுகால் மாறுகை வாங்கப் பெற்று இறக்கிறான். பொம்மியும், வெள்ளையம்மாளும் தீப்பாய்ந்து உயிர் விடுகின்றனர். பின்னர் வழிபாடு பெறுகின்றனர்.

திரிபுற்ற மதுரை வீரன் கதையைப் பார்ப்போம். காசிவன் நாட்டை ஆண்டு வந்த துளசிராஜனுக்கு நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லை. குழந்தை வரம் கேட்டு மனைவியுடன் கங்கையில் நீராடி விஸ்வநாதரை வழிபடுகிறான்.அதன் பலனாக ஓர் ஆண் குழந்தை கொடி சுற்றிப் பிறக்கிறது. குழந்தை பிறந்த நேரத்தையும் கொடிசுற்றிப் பிறந்ததையும் ஆராய்ந்த சோதிடர்கள் குழந்தையால் நாட்டுக்கே ஆபத்து என்கின்றனர். அதனால் காசிவிஸ்வநாதர் அருளால் பிறந்த குழந்தை காட்டில் விடப் படுகிறது. முனிவர் ஒருவர் குழந்தையைக் காப்பாற்றி அவ்வழியே வந்த சின்னான் மற்றும் அவன் மனைவியிடம் ஒப்படைக்கிறார். காசியில் வசிக்கும் சக்கிலிய சாதியைச் சார்ந்த அவர்களுக்கும் நீண்ட நாட்களாகக் குழந்தைப் பேறு இல்லை. எனவே இக் குழந்தையைப் பாசத்தோடு வளர்க்கின்றனர். ஆனால் ஊரார் இது மன்னனால் கைவிடப்பட்ட குழந்தை என்பதைக் கண்டு பிடிக்கின்றனர். மன்னனால் குழந்தைக்கு ஆபத்து ஏற்படும் என்று உணர்ந்த சின்னான் மனைவி குழந்தையோடு தென்திசை நோக்கிப் பயணமாகிறாள். கங்கைக் கரையைச் சேர்ந்த சின்னான் குடும்பம் நடையாய் நடந்து விந்திய, சாத்புரா மலைத்தொடர்களைத் தாண்டி நர்மதா, தபதி, மகாநதி,கோதாவரி, கிருஷ்ணா, பாலாறு, பெண்ணை முதலிய ஆறுகளைக் கடந்து காவிரிக் கரையை வந்தடைகிறது. காவிரிக் கரையில் பொம்மண்ண நாயக்கன் ஆட்சி செய்யும் சீமையில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். வீரன் வாலிப வயதில் கட்டிளங்காளையாகக் காட்சியளிக்கிறான். கன்னிமாடக் காவலுக்குச் செல்லும்போது இளவரசி பொம்மியைக் காதலிக்கிறான். இளவரசி பொம்மி அவனது தாழ்ந்த சாதியைக் காரணங்காட்டி அவனது காதலை நிராகரிக்கிறாள். தான் உண்மையில் காசிராஜாவின் மகன்

என்று கூறி அவளுடைய காதலுக்குக் கெஞ்சுவ தாகக் கதை நீள்கிறது. இக்கதை மூலம் மதுரை வீரன் பிறப்பில் சக்கிலியன் அல்ல, மன்னனின் மகன் என நிறுவப்படுகிறது. மதுரை வீரனை மன்னனின் மகனாக மாற்றியதில் திருப்தியடை யாத திரிபாளர்கள் மேலும் ஒருபடி மேலே சென்று மதுரை மீனாட்சி அம்மனின் மகனாக மாற்றி கோயிலும் கட்டிவிட்டார்கள்.

அது சார்ந்த கதையைப் பார்ப்போம்.

மாறுகால் மாறுகை வாங்கப்பெற்று இறந்து கிடக்கிறான் மதுரைவீரன். செய்தி அறிந்த பொம்மியும், வெள்ளையம்மாளும் தீப்பாய்ந்து உயிர் விடுகின்றனர். தவறான தீர்ப்பளித்த திருமலை நாயக்கன் பழியிலிருந்து விடுபட, மதுரை வீரன் மீண்டும் உயிர் பெற வேண்டி மீனாட்சியம்மனிடம் கண்ணீர் விட்டு கதறியழுகிறான். உடனே மீனாட்சியம்மனும் மன்னன் பழியிலிருந்து விடுபட அருள் புரிகிறாள். மதுரை வீரன் உயிர்த் தெழு கிறான். ஆனால் பொம்மியும், வெள்ளையம்மாளும் உயிர்விட்ட செய்தியறிந்து தன் தலையைத்தானே துண்டித்துக் கொள்கிறான். அப்போது மீனாட்சி யம்மன் மன்னனுக்கு மட்டும் காட்சியளித்து, “மன்னா, மதுரை வீரன் ஜென்மம் புனிதமடைந்து விட்டது. இனி அவன் என் மகனாக தெய்வ நிலையை அடைந்து விட்டான். என் கோயிலின் முன்னால் வீரனுக்கும் ஒரு கோயில் எழுப்பு. முதலில் வீரனை வணங்கிய பின்னரே என்னை வணங்க வேண்டும்” என்று ஆணையிடுகிறாள்.

அதன்படி மன்னனும் கோயில் கட்டுகிறான். இப்போதும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் செல்லும் பக்த கோடிகள் முதலில் வீற்றிருக்கும் மதுரை வீரனை வணங்கி விட்டுத்தான் மீனாட்சி அம்மனை வணங்குகிறார்கள்.

அடுத்து காத்தவராயன் கதையைக் காண போம்.

பறையர் சாதியில் பிறந்த பரிமணம் என்ற காத்தவராயன் தன் சாதிப்பெண் ஒருத்தியைத் திரு மணம் செய்து வாழ்ந்து வந்தான். ஒருநாள் ஆற்றில் நீராடும்போது புத்தூர் சோமாசிப் பட்டர் மகளான ஆரியமாலா அவனது அழகில் மயங்கி அவனைக் காதலிக்கிறாள். காத்தவராயனும் அவள் காதலை ஏற்று அவளை அழைத்துச் சென்று விடுகிறான். இது குறித்துப் பிராமணர்கள் மன்னனிடம் முறை யிட்டனர். அவனது வளர்ப்புத் தந்தையும் ஊர்க் காவல் அதிகாரியுமான சேப்பிள்ளையான மன்ன னது கட்டளைப்படி அவனைக் கைது செய்து கழு வேற்றிக் கொல்கிறான். திருச்சியிலும் அதனைச் சார்ந்த ஊர்களிலும் ‘கழுவேற்றப் பாரி வேட்டை’ என்ற விழா பங்குனி பவுர்ணமி நாளில் நடை பெறு கிறது. இவ்விழாவில் இக்கதையைப் பாடி ஆடுகிறார்கள்.

இக்கதையின் திரிபு வடிவத்தைப் பார்ப்போம். இதன்படி மான் வயிற்றில் பிறந்த காத்தவராயன் தேவலோகத்தில் நந்தவனம் காக்கும் பொறுப்பில் ஈடுபட்டிருந்தான். அங்கு நீராட வந்த ஏழு தேவ கன்னியரின் சாபத்திற்கு ஆளாகிப் பறையனாகப் பிறந்தான். ஏழு கன்னியரில் ஒருத்தியே ஆரிய மாலாவாகப் பிறந்தாள். சிவபெருமான் வழங்கிய சாப விமோசனத்தின்படி கழுவேற்றிக் கொல்லப் பட்ட பின்னர் காத்தவராயன் மீண்டும் தேவலோகம் செல்கிறான்.

மேற்படி மூன்று கதைகளிலும் ஓர் ஒற்றுமை யைக் காணலாம் அது சாதி மீறிய காதலாகும். அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த ஆதிக்கச் சாதியினர் சாதி மீறிய காதலுக்கு படுகொலை களைப் பரிசாகத் தந்து தங்கள் சாதிய மேலாண் மையைத் தக்கவைத்துக் கொண்டனர். அதன் பின்னர் கொலையுண்டவர்கள் வழிபாடு பெற்று அடித்தள மக்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கியதும், தங்களின் பண்பாட்டு மேலாண்மை யைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஆதிக்கச் சாதியினருக்கு ஏற்படுகிறது. அதற்கான ஆயுதந்தான் புராணப் புனைவுகள்.

இம்மூன்று கதைகளின் தொடர்ச்சியாகக் காஞ்சி மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வைப்பணை கிராமத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவம் ஒன்றைப் பார்ப்போம்.

என்னுடைய களப்பணி சார்ந்து பத்தாண்டு களுக்கு முன்னால் வைப்பணை கிராமத்திற்குச் சென்றிருந்தேன். என்னிடம் ஒரு பதிவேடு இருக் கும். அதில் கிராமத்தில் உள்ள அனைவரின் பெயர் களும் குடும்ப வாரியாகப் பதிவு செய்யப் பட்டிருக் கும். என்னுடைய பணி என்னவென்றால் வீடு வீடாகச் சென்று குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்களைச் சரி பார்த்து சேர்த்தல், நீக்கம் இருப்பின் செய்ய வேண்டியது. அதன்படி முதலில் மேல்சாதியினர் குடியிருக்கும் ஊர்ப்பகுதியில் கணக்கெடுப்பைத் துவக்கினேன்.

ஒரு குறிப்பிட்ட வீட்டில் சந்தானம் என்பவரைப் பற்றிக் கேட்டபோது அவர் இறந்து விட்டதாகக் கூறினர். நானும் அந்தப் பெயரை நீக்கம் செய்து விட்டேன். அதன் பின்னர் கீழ் சாதியினர் குடியிருக்கும் காலனிப் பகுதிக்குச் சென்று கணக்கெடுப்பு செய்தேன். அப்போது பதிவேட்டில் இல்லாத புதிய குடிசை ஒன்று காணப்பட்டது. புதிய குடும்பம் ஒன்றைப் பதிவேட்டில் சேர்க்க வேண்டுமெனில் அந்தக் குடும்பத்தினர் இதற்கு முன்பு எங்கிருந்தார்கள் என்பதையும் பதிய வேண்டும். அதன்படி அக்குடிசையில் வசித்த நபரிடம் விசாரித்தேன். முதலில் தயக்கம் காட்டியவர் பின்னர் விவரமாகச் சொன்னார். அவர் வேறு யாருமல்ல மேல்சாதிக் குடும்பமொன்றில் இறந்து விட்டதாகக் கூறிய சந்தானம்தான்.

அவர் கீழ் சாதிப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டதால் வீட்டை விட்டும் ஊரை விட்டும் விலக்கி வைத்து விட்டனர். அவரும் அந்தப் பெண்ணுடன் காலனிப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உயிரோடு இருக்கும் நபரை இறந்து விட்டதாகக் கூறியது மேல்சாதிக் குடும்பத்தின் தற்போதைய இயலாமையைக் காட்டுகிறது. அவர்களுக்கும் வாய்ப்பிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே ஊகிக்க முடியும். இதுவே பெண்ணாக இருந்தால்?கிராமங்களில் கீழ்சாதி இளைஞனைக் காதலித்த மேல்சாதிப் பெண்கள் வீட்டிற்குள் அடித்தே கொல்லப்படுகிற சம்பவங்களும் உண்டு. இவைகள் வெளிச்சத்துக்கே வருவதில்லை.

■■■

**நூலடைவு:**

**1.''கதாசாகரம்''-சா.தேவதாஸ்** *(தொகுப்பாசிரியர்) (சர்வதேச வாய் மொழிக்கதைகளின் தொகுப்பு) - விஜயா பதிப்பகம்-1999.* **2.''நாட்டார் வழக்காற்றியல்:சில அடிப்படைகள்''- தே.லூர்து**, *நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை,2000.* **3.''பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள்''-பேரா.ஆ.சிவ சுப்பிரமணியன்,** விசை சிறப்பு வெளியீடு. **4''லியோவின் மதுரைவீரன் சுவாமி'' - க.கௌ.முத்தழகர்,** *வியோ புக் பப்ளிஷர்ஸ், 2004.* **5.''மதுரைவீரன்''-ரிஷபானந்தர்,** *அநுராகம்,2005.*

**சிறுசஞ்சிகைகள் சில:**

**மனுசா**
ஆசிரியர் :த.மலர்ச்செல்வன்
ஆரயம்பதி-3,
மட்டக்களப்பு, இலங்கை.

**ஞானம்**
(கலை இலக்கிய மாத இதழ்)
தி.ஞானசேகரன்,
3பி, 46வது ஒழுங்கை, கொழும்பு-06,
இலங்கை.

**இனிய நந்தவனம்**
(மக்கள் மேம்பாட்டு இதழ்)
த.சந்திரசேகரன், 5.புதுத்தெரு, சிஎஸ்ஐ மருத்துவமனை எதிரில், உறையூர்,
திருச்சி-003, தமிழ்நாடு, இந்தியா.

**படிகள்**
(இருமாத இலக்கிய இதழ்)
அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்றம்
**ASWA** 30.ஜெயந்தி மாவத்தை, அநுராதபுரம்,
இலங்கை.

**மல்லிகை**
டொமினிக் ஜீவா
201/4, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு-13,
இலங்கை.

**நாளை விடியும்**
(இரு திங்கள் இதழ்)
ப.இரெ.அரசெழிலன்,
4/7 முருகன் இல்லம்,
பாரதிபுரம் முதல் தெரு, கைலாசபுரம் (அ)
திருச்சிராப்பள்ளி (மா) 620014,
தமிழ்நாடு, இந்தியா.

## அவளின் வாழ்க்கை!

வாழ்வதற்காக
வாழ்க்கைப்பட்டேன்!
வாழ்க்கைப்பட்டபின்புதான்
வாழ்க்கையை
அறிந்துகொண்டேன்!

கல்லானாலும்
கணவன் என்றார்கள்!
கல்லே கணவனால்?

காசில்லாத நேரங்களில் எல்லாம்
சீதனம் பற்றிய கதைகள் வரும்! - என்
பெற்றோரின் வறுமைபற்றியே
ஏளனங்கள்!

ஆனால் அவரிடமோ ஒரு
சீலம்பாயும் இல்லை என்பதை
நான் ஆரிடம் முறையிடுவது?

சம்பந்தமில்லாமல்
வரும் சந்தேகங்கள்?
சம்பந்தமே இல்லாமல்
உயரும் கை, கால்கள்!

நடப்பதற்காகக்
காலை உயர்த்தினாலும்
உதைப்பதற்குத்தான்
உயர்கின்றதோ என பலமுறை
பயத்தினால் உறைந்திருக்கிறேன்!

கன்னங்கள் வீங்கிய நேரத்தில்
சொந்தங்கள் வந்தால்
கண்ணீரை உள்வாங்க
படாத பாடு பட்டிருக்கிறேன்!

தப்பிப்பதற்கும்
நிம்மதிக்குமாய்
கழிவறைக்குள்ளேயே
அதிக நேரங்களைக்
கழித்திருக்கிறேன்!

இரவில்
திருமணம் செய்துகொள்வார்!
பகலில் பிரிந்துவிடுவார்!

தினமும் இப்படித்தான்!

அவர் சந்தோசத்திற்காக
நான் சம்மதிக்காமலேயே
தாயாகிவிட்டேன்!

இனிமேலும் முடியாது!
பிரிந்துவிடலாம் என்றாலும்
முடியவில்லை!

சமாளித்துப்போ என
சமாதானம் சொல்பவர்களுக்கு
பதில் சொல்ல முடியாமல்
பலமுறை அழுதிருக்கிறேன்.

பண்பாடு கலாச்சாரம் என்று
கதை கதையாய்ச் சொல்கிறார்கள்

திருமணத்தின்போது தாலிதான்
உனது வேலியென்றார்கள்.

இப்பொழுது - அந்தத் தாலி
ஆண்டவனின் தலையில் வைக்கப்பட்ட
முள் கிரீடம்போல
எனது கழுத்தைக்
குத்திக் குதறுகின்றது!

என்னைப்போல் இன்னும்
எத்தனைப் பெண்கள்?

**- வண்ணை தெய்வம்.**

# சவப்பெட்டி

## ஜோ.டானியல்

(காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள வேளியூர் என்ற கிராமத்தில் பிறந்து ஒரு தனியார் பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் இவரின் மூன்று சிறுகதைகள் "சாரம்" என்ற சிறுகதைத் தொகுப்பொன்றில் இடம் பெற்றிருக்கின்றன. )

**"குழி வெட்ட ஆள அனுப்பிட்டாங்களா" என்று** தன் ஊரில் பலவேலைகள் தனக்கு இருப்பதை மனதில் வைத்துக் கொண்டு சாவு வீட்டாருக்குத் தான் கேட்டது ஆறுதலாய் இருக்குமென வந்தவர் கேட்க, "எங்க ஊர் சுருக்காட்ல ஒரு கை மண்ணத் தோண்டி எடுக்க முடியாது. அவ்வள கெட்டியா இருக்கும். அதனால குழி எடுக்கணும்னா பயப்படுவாங்க... இதுக்கு யார அனுப்பிச்சாங்களோ இல்லியோ தெரியலியே...."

இதைக் கவனித்த துரை "ஓயா... ஜானகி! இன்னய்யா பேசற நீ- அவருதான் வெளியூர்க்காரரு தெரியாது. உனக்குக் கூடவாத் தெரியாது. சர்தான் நீ நம்ம ஊர்ல இருந்தாத்தான, நீயே மாசத்துல பாதி நாள் மாமியார் ஊட்ல இருக்குற உனக்கு எங்க நம்ம ஊர் சங்கதி தெரியப்போவது. நமக்கு புத்தி தெரிஞ்சதிலர்ந்து முனுசாமி, கண்ணப்பன், எல்லன், நம்ம ஆனந்தன் இவங்கதானைய்யா சேரியில யாரு செத்தாலும் குழி வெட்டுவானுங்க. பொணம் இருக்கறவரிக்கும் பொணத்துக்குச் சொந்தக்காரன், மாமன், மச்சான், அண்ணன், தம்பின்னு யாருகிட்டயும் சலிக்காம வாங்கி ஊத்திக்கினே இருப்பாங்க... ஆனா இந்த அப்பாவி மனுசன் உழைப்பாளி, திருடத் தெரியாதவன், தாய் வீட்டுக்குப் போன பொண்டாட்டி வரலியேன்னு போய் கூப்டாக்கா அவுங்க மச்சான் பொடவ எடுத்துக் குடுத்து அனுப்புறன்... போன்னு என்ன அனுப்பிச்சிட்டாங்களேன்னு மனசுல வச்சிக்கினு, ஏற்கெனவே அவன் புள்ளிங்கள மச்சான்மாருங்க அப்பன் குடிகாரனா இருக்கறான புள்ளிங்களயாவது கௌரவமா வளத்து ஆளாக்கிடலாம்னு அவங்கிட்டயிருந்து மூனு புள்ளங்களயும் கொண்டு போய் வளத்து ஒரு புள்ளக்கிக் கல்யாணத்தையும் பண்ணி அங்கயே வச்சிருக்கராங்க..."

"ஏண்டா உன் மச்சானமாருங்க உன புள்ளிங்கள நல்லாப படிக்க வெச்சி ஆளாக்கி இருக்கறாங்களேன்னு சொன்னாக்கூட "இன்னாய்யா பெர்சா ஆளாக்கிட்டாங்க, என் புள்ளிங்களுக்கு என்மேல பாசம் இல்லாமப் பண்ணிட்டாங்களேய்யா... என் புள்ளங்க என்னான்ட இருந்திச்சின்னா என் தகுதிக்கு வளத்திருப்பேன்''னு அடிக்கடி சொல்லிக் கஷ்டப்பட்டான். நேத்து மாமியார் ஊருக்குப் போய்த் திரும்பி வந்ததும் என்னா நெனச்சானோ... ஒக்கட்டான் மவன் இப்டி ஒரு முடிவ தேடிக்னான். யாருசெத்தாலும் டேன்சு ஆடுவான். குழிவெட்ட மொதல்ல நிப்பான்யா... இவளோ குடுன்னு வாயத தொறந்துக் கேக்க மாட்டான்... இன்னிக்கி அவனுக்குக் குழி வெட்ட ஆளத் தேடறோம். முனுசாமி, கண்ணப்பன், எல்லன் அவங்க மூனு பேரையுந்தா குழிவெட்ட அனுப்புனம்..." என்று லேசான கௌரவ போதை யில் இருந்தவர் மற்ற இருவரிடம் சற்றுச் சோகத்தையும் வெளிப்படுத்

தும் படியாகப் பேச்சை முடிக்கும் போது விசும்பிக் கொண்டே சொன்னார்.

ஒரு கணவனும் மனைவியும் கையில் மாலையுடன் பிணத்தை நெருங்கும்போது, மனைவி வேகமாகச் சென்று, "அய்யோ... அய்யோ... அய்யோ... என் ஊமத்தொர அண்ணா நீ எப்படித்தான் பூட்டியோ" என இரண்டு கையாலும் பிணத் தின் முகத்தைப் பிடித்து அழுததும் உயிரற்றுக் கிடக்கின்ற பிணத்தின் மீது உயிரற்றுக் கிடக்கின்ற ரோஜா மாலையில் தேனைத் தேடிவிட்டு வாய் மூடிக் கிடக்கும் பிணத்தின் உதட்டோரத்தில் உருவாகும் ஒரு ரசாயனக் கலவையைத் தேன் என்று உறிஞ்சிக் கொண்டிருந்த ஈ முகத்தைத் தொட்டு அழுததும் பறந்தது.

தலை நிறைய பூ சுத்தபபட்டு அழுது... அழுது சுயநினைவு இல்லாதது போல் இருந்த பெண்ணை வயதான கிழவிகளும் நடுத்தரப் பெண்களும் கை கோர்த்து அழுது கொண்டு மூச்சைச் சிந்தி பக்கத்துக் கிழவி மேல் தடவி "எப்ப தண்ணிக் கொடத்தக் கொன்னாந்து குழாயண்ட வச்சாலும் எடுத்து வச்சிட்டு முன்னாடி புடிக்கிறியே கிழவி" இன்னொரு முறை பலமாகச் சிந்தி கிழவி மேல போட்டுட்டு குனிந்து அழுதாள் ஒரு பெண். அழுபவர்கள் பிணத்தைப் பற்றியோ, இழந்த குடும்பத்தினருக்குத் தைரியம் ஊட்டும் படியாகவோ அழவில்லை. எல்லோரும் தங்கள் கடந்தகாலச் சோக நிகழ்ச்சிகளைச் சொல்லி அழுது கொண்டிருந்தார்கள். குழந்தைகளும் வாலிபப் பெண்களும் ஆண்களும் சுற்றிச் சோகத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். தொழில் தெரியாதவர்கள் போட்ட சாமியானாப் பந்தல் தலையில் முட்டும்படியாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

மாட்டுத் தோலில் இருந்து மில்லினக்ஸ் பேப்பருக்கு மாறிப்போய் இருந்த மேளங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. அதில் மேளச்சட்டி வைத்திருப்பவர் மட்டும் ரோட்டில் புகைந்து கொண்டிருந்த வைக்கோல் கரிக்கட்டையில் மேலும் கொஞ்சம் வைக்கோல் போட்டு எரிய வைத்து தன் மேளச் சட்டியை அனல் காட்டி எடுத்துக் கொண்டு மீண்டும் மேளத்தோடு தன்னை இணைத்துக் கொண்டான்.

மீன் பாடி மோட்டார் சைக்கிளில் கருப்புத் துணியால் அலங்கரிக்கப்பட்ட சவப் பெட்டி வந்திறங்கியது. சவப்பெட்டியைப் பார்த்தவுடன் அங்கங்கே தவித்துக் கொண்டிருந்த மக்கள் கொஞ்சம் பரபரப்பாகிப் பிணத்தருகில் கூடினார்கள். பெட்டியைப் பார்த்ததும் பெண்கள் தங்கள் இறுதிக்கட்ட அழுகையைக் காண்பித்தார்கள். பிணத்தைக் கழுவுவதற்காக இரு குடத்தில் நீர் நிரப்பி அதில உதிரிப்பூக்களைக் கொட்டி வைத்திருந்தார்கள். அதற்குள் ஒருவர் "பொணம் ரொம்ப நொந்துபோய் இருக்குது தண்ணிலாம் ஊத்தாதீங்கய்யா..." என்றார். குடத்து நீரை எடுத்து இறந்தவரின் மனைவி மீதும் அவர் பிள்ளைகள் மீதும் உறவினர்கள் மீதும் ஊற்றினார்கள். அழுகையின் சத்தம் அதிகரித்தது. கணவனை இழந்த அந்தப் பெண் தன் சகோதரர்களைக் கட்டிப் பிடித்து இனி தன் எதிர்கால வாழ்க்கை உங்களிடம் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தாள். கிருத்தவ மதகுரு அடக்க ஆராதனையில் கலந்து கொண்டு "தயவு செய்து யாரும் அழ வேண்டாம், சற்று அமைதியாக இருங்கள்..." என்று சொல்லி ஜபம் என்றார். பலர் அமைதியானார்கள். ஒரு சிலர் பலமுறை சொன்ன பிறகே அமைதியானார்கள். "ஏம்பா யாரு பொட்டியைப் புடிக்கறவங்க புடிச்சித் தூக்குங்க... நாலுபேரு நாலு பக்கம் புடிங்கபா" ஜனக் கூட்டத்தில் யாரோ ஒருவர் சொன்னார். பிணத்துக்கு உரிமை கோருபவர் நாலுபேர் நாலு பக்கம் பிடித்தார்கள். உதவினார்கள் என்று பின்னாட்களில் சொல்வார்கள் என்று எண்ணிக் கொண்டு இடையில் இரண்டு பேர் தாங்கிக் கொண்டு போனார்கள்.

ஒருத்தர், "டேய் ஓடுரா சைக்கிள்ல அந்த மாலை எல்லாம் வாரிப் போட்டுக்குனு முன்ன போய் பிச்சி போட்டுக்கினே போடா"

"யாம்பா சுத்தி...சுத்திமறந்திடப் போறாங்க அத, நாபகமா எத்தாரச் சொல்லு" என்றார்.

பிணம் சேரியின் கோடித் தெருவைக் கடக்கும் போது ஒரு சில வயதான பெண்கள் "ஆ... போதுமா பொம்பளிங்க எல்லா நின்னுக்கங்கம்மா..." என்றனர். ஒரு சில பெண்கள் பிணம் போகும் திசையில் தரையில் விழுந்து வணங்கி வீடு திரும்பினார்கள். இறந்தவரின் மனைவி தரையில் விழுந்து புரண்டாள்.

எல்லோருக்கும் முன்னே வானத்தை

நோக்கிச் சென்று வெடிக்கக் கூடிய வெடி வைத்திருப்பவர் அவனுக்குப் பின்னால் சைக்கிளில் மாலைகளை மூன்று பேராகப் பிய்த்துப் போட்டுக் கொண்டு போகிறார்கள். அதற்குப் பின்னால் பேண்டு வாத்தியத்தோடு கிருத்தவப் பாடல்கள் பாடிக்கொண்டு போகிறார்கள். போகிறவழி பத்து அடி அகலம் கொண்டதாய் இருந்த போதிலும் இரு பக்கமும் வயல் நிலங்களாய் இருப்பதினால் ரோட்டின் இரு பக்கமும் இரண்டடிக்கு மேலாக முள் செடிகளும், பூண்டுகளும் அங்கங்கே பனை மரங்களும் வளர்ந்திருந்தது. பாதை குறுகலாகவே இருந்தது. ஆடுமாடுகளை மேய்க்க ஓட்டிச் செல்வதற்கும் வயல் நிலங்களில் விளைச்சலைக் கொண்டு வருவதற்கும் இப்படிப் பிணத்தைக் கொண்டு செல்வதற்கும் தங்களுடைய முன்னோர்கள் வயல் நிலங்களில் இருந்து ஒதுக்கப்பட்டது போலும். காலம் கடக்க... கடக்க.. பாதை குறுகிக் கொண்டே போயிருக்கிறது. மேலும் காலையில் ஓட்டிச் சென்ற ஆடுகள் தங்கள் கழிவுகளை மனிதன் அச்சில் செய்கின்ற மணியைப் போல் வரிசையாகப் போட்டு இருந்தது. ஒரு சில விழுந்த வேகத்தில் உருண்டு பக்கத்திலும் கிடந்தது. அந்தப் பாதை கிழக்கு மேற்காக இருந்தது. சுடுகாடு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் சேரிக்கு மேற்கில் இருந்தது.

சவப் பெட்டியைத் தூக்கிச் செல்பவர்கள் கால்கள் பாரத்தைத் தாங்க முடியாமல் இடறி... இடறி... நடந்தனர். அதிலும் தலைப் பகுதியைப் பிடித்திருந்தவர்கள் சற்று உயரம் குறைவாகவும், கால் பகுதியைப் பிடித்திருந்தவர்கள் சற்று உயரம் அதிகமாகவும் இருந்தபடியால் பாரம் முன்னிருந்த வர்களுக்கு அதிகமாகச் சார்ந்திருந்தது. கழுத்துப் பகுதியில் வேர்வைகள் சாரை சாரையாய் உருவாகி முதுகுப் பகுதியின் சட்டையை நனைத்துக் கொண்டிருந்தன.

போதை போட்டுக் கொண்டு வெடி வெடிப் பதால் என்னவோ வெடி வானத்தை நோக்கி தலைசுற்றி சுற்றிச் சென்று வெடிக்கின்றது.

சவப்பெட்டிக்குப் பின்னால் ஜனங்கள் கடமைக் காக முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தார் கள். முன்னால் பிய்த்துப் போட்டுச் செல்கின்ற மலர் இதழ்கள் பல பேர்களின் காலடிகளில் மிதிபட்டுக் கருகி இருந்தது. சில ரோஜா இதழ்கள் பாதி நல்ல நிலையுடனும் பாதி காலடிக்கு இரையாகியும் இருந்தன. சவப்பெட்டியைத் தலைப பக்கம் பிடித்திருந்தவர்களுக்கு மாற்ற ஆள் கிடைத்ததால் கொஞ்சம் நிம்மதி பெருமூச்சு விட்டுப் பக்கத்தில் நடந்தார்கள்.

சுடுகாடு இருக்கும் ரோடு தாழ்வான பகுதியாய் இருந்தது. பக்கத்தில் நடவுக் கழனி என்பதால் அதில் தேங்கியிருக்கும் தண்ணீர் லேசாகக் கசிந்து ரோட்டைக் கடந்திருக்கும் போல. அவ்வழியாக வந்த டிராக்டர் டயர் ரோட்டில் ஒன்னறை அடிக்கு மேலாக ஆழமாக இறங்கிப் போயிருக்கிறது. அதன் பிறகு கழனியின் கசிவை அடைத்திருப்பார்கள் போல. ரோடு காய்ந்த நிலையில் டிராக்டர் டயரின் தடம் ஆழமாக அப்படியே இருந்தது. சவப்பெட்டியைத் தூக்கிச் சென்றவர்கள் பள்ளத்திலிருந்து தங்கள் கால்களை விலக்கிக் கொண்டு சென்றார்கள். ஒரு சில சிறிய பிள்ளைகள் அந்தப் பள்ளத்தில் இறங்கிச் செல்கிறார்கள். அதில் ஒரு சந்தோசம்.

வெடிக்கத் தெரியாதவன் விட்ட வானவெடி ஜனங்களின் தலை உயரத்திலேயே சர் என்று பாய்ந்து வந்து பக்கத்தில் விழுந்து வெடித்தது. வந்தவர்கள் பதறிப் போனார்கள்.

குறுகலானபாதை மீண்டும் ஒத்தையடிப் பாதை யானது. புல்லும் தூள் முள்ளுகளும் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்தன. சுண்ணாம்புக் கற்களும் சிறிய சிறிய கூழாங் கற்களும் பரவலாக இருந்ததால் மிதியடி போட்டிருந்தவர்கள் நல்ல பாதையை விட்டு வீராப்பாய் நடந்தார்கள். மிதியடி போடாதவர்கள் நடந்து தேய்ந்த வழியிலேயே நடந்தார்கள். அதனால் கூட்டமாய் வந்தவர்கள் வரிசையானார்கள். மேற்கு கிழக்காக எடுக்கப் பட்டிருந்தது குழி. மண்ணை எடுத்துத் தெற்குப் பக்கமாய்ப் போட்டிருந்தார்கள். போடப்பட்டிருந்த மண்ணுக்குப் பக்கத்தில் மண்டையோடு வரிசையான பற்களைக் காட்டிக் கொண்டிருந்தது. கூடவே கை கால் எலும்புகளும் கூட இருந்தன. அது தோண்டப்பட்ட குழியிலிருந்து எடுத்து போடப் பட்டிருக்கிறது. வரிசையாகச் சில சமாதிகள் மண் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் புதைக்கப்பட்ட பிணமேட்டில் மாலைகள் கருகியும், ஊதுவத்தி பாதி எரிந்து அணைந்த நிலையிலும் இருந்தன. வடக்குப் பக்கமாகச் சவப் பெட்டி இறக்கப்பட்டது. தலைப்பகுதி மேற்காகவும் கால் பகுதி

கிழக்காகவும் வைக்கப்பட்டது.

"இந்த ஒக்காட்டான் மகனுங்க எவ்ளோ நேரமா எடுக்கிறானுங்க பாருப்பா குழிய.. ஓயா கண்ணப்பா தொடச்சிட்டு எழுந்திருயா..." என்றார் கிராமப் பண்ணைக்காரர்.

குழியைவிட்டுச் சற்றுத் தள்ளி வேலிக்காத்தான் செடி நிழலில் உட்கார்ந்திருந் தவர், அரை டஜன் காஜா பீடியை ஒவ்வொரு கட்டாக எடுத்து மேல் பேப்பர்களைப் பிரித்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டை மாத்திரம் பிரிக்காமல் தன் உள் பாக்கெட்டில் எடுத்து வைத்தார்.

கிருத்தவ குரு பைபிள் வார்த்தையை வாசித்து விளக்கம் தந்து கண்களை மூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்.

முனுசாமி, கண்ணப்பன், எல்லன் மூவரும் "ஏம்பா எவ்ளோ கூலி வாங்கலாம்" என்று ஒருவரோடொருவர் சத்தமில்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இன்னா புச்சாக் கேக்கற. ஒரு குழி எத்தா ஆறுநூறு வாங்குவோம். அது செத்தானே ஆனந்தன் அவனுக்கே நல்லாத் தெரியும். நாலு பேரா எடுக்கறத நாம மூனு பேரு எடுத்துக்கிறம். ஆனா குழி எல்லார்க்கும் ஒரே அளவுதான. அதனால ஆறுநூறு வாங்கு மூனு பேரும் பங்கிட்டுக்குவோம்" என்று ஏற்கெனவே நாலுநாள் குடிச்ச சாராய பாக்கியும், வீட்ல ஐம்பது ரூபாய் சாப்பாட்டுக்குக் குடுக்கலாம் எனக் கணக்குப் போட்டுக் கொண்டு சொன்னான் எல்லன்.

"இல்ல மச்சான், எந்தச் சவானாலும் நம்ம நாலு பேருதான் குழி எடுப்பம். நம்பள்லயே ஒருத்தன் செத்துட்டான். அவனுக்குக் குழி வெட்றம். அதுக்கும் கூலி கரைக்டா வாங்கனுமான்னு...? சற்று நேரம் அமைதியானதும் தன் வீட்டை நினைத்தான். நேற்றுச் சாவுச் செய்தி சொல்ல ஊர் ஊராச் சுற்றியதில் நேற்றய பொழைப்பும் போனது. இன்றைய வேலையும் கெட்டுப்போனது. ஒருநாள் வேலைக்குப் போயிருந்தால் ரேஷனில் அரிசி வாங்கிக் குழந்தைகளுக்கு வெறும் கஞ்சியாவது போட்டிருக்கலாம். நாம கௌரவத்துக்கு இதையும் வேண்டாம் என்று சொல்லி விட்டால் குழந்தைகள் பட்டினி தான் கிடக்க வேண்டும் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, "சரி கேளு மச்சான்" என்றான் கண்ணப்பன்.

"ஓயா... நாம கஷ்டப்பட்டோம் யவனோ பணம் குடுக்கப்போறான். ஒனக்கு ஏன்யா நோவுது..." காலையில் அவன் மனைவி "உன்னாக் கூட இருந்தவன் ரோசமா தூக்குப் போட்டுக்கினு செத்தான். உனக்கு ஏண்டாப் பாவி அந்த ரோசம் வரமாட்டன்னுது. நானும் ஒரு மாசமா சொல்லிக் கினுகீறன்... ஒனக்குக் கல்யாணந்தான் பண்ணத் துப்பு இல்ல... பாத்து பாத்து அவளா ஓத்தன கூட்டிக்கினுப் போய் கண்ணுக்கு மறவா வாழறா... அதுக்குப் பொறந்து இருக்கற கொயந்திக்காவது ஒரு சட்ட வாங்கிம் போய் போட்டு வரலாம்னு பாத்தா ஒரு பைசா குடுக்க மாட்டன்றிய..." என்று பேசியதை நினைத்து இன்னிக்கி சண்ட போட்டாவது காசு வாங்கிச் சென்று மனைவியிடம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான் முனுசாமி.

மதகுரு மண்வெட்டியில் லேசான மண் வைத்துக் கொண்டு மேலும் சில வார்த்தைகள் சொல்லி விட்டு "பிதா, குமாரன் பரிசுத்த ஆவியினாலே இந்த உடலை மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்கு சாம்பலாகவும் ஒப்புக் கொடுக்கிறேன்..." என்று முடித்தார்.

கூட்ட நெரிசலில் யாரோ ஒருவர் "போனவன் நிம்மதியாப் போய்ச் சேந்துட்டான். இருக்கற நாமதான் அடுத்த வேளச் சோத்துக்கு வழி தேடிக் கஷ்டப்படணும். போடுங்கய்யா மண்ணு போடுங்கப்பா..." என்று சற்று சத்தமாகவும் வாழ்க்கையில் சலிப்படைந்தவராகவும் சொன்னார்.

இதைக் கேட்ட முனுசாமி, கண்ணப்பன், எல்லன் தனக்கே சொன்ன வாக்கு என்று சந்தோஷப்பட்டு மிகவும் வேகமாக மண்ணை வெட்டிக் குழியில் மூடிக்கொண்டிருந்தார்கள்.

சவப்பெட்டி பூமிக்குள் சத்தமில்லாமல் புதைந்து கொண்டிருந்தது. குழி தோண்டும் போது வெளியே வந்த மண்டை ஓடு ஏளனமாகப் பல்லைக் காட்டிக் கொண்டிருந்தது.

■■■

## எப்போதான் நீ மனிதனாவாய்?

நீ எந்தப் பிரபஞ்சத்திலிருந்தும்
சுயம்புவாக வரவில்லை?

அம்மாவின் கருப்பையும்
கருவறையுமே உனது நதி மூலங்கள்
பகலும் இருட்டும் விழித்தலும் மூடலும்
ஆணவமும் அதிகாரமும்
பணச் செருக்கும் என்ற
பிரபஞ்ச மானிடம்தான் நீயும்...

இதை நீ தீர்க்கமாய்க் காண மறுக்கிறாய்
இந்த உண்மையை உணர மறுக்கிறாய்
உன் அதிகார அரியணை
உன்னைப்போலத்தான்
உன் எதிரியும் இருப்பானென
ஏன் எண்ண மறுக்கிறாய்?

வியட்நாமில் படித்த பாடம்
போதாதென்று போய்
ஈராக்கில் தினம் படும்பாடு போதாதா?
அங்கே இரசாயன ஆயுதம் இருப்பதாய்ச்
சொல்லிச் சென்றாய்
இன்றோ ஜனநாயகம்
உருவாக்கச் சென்றதாய் உளறுகின்றாய்!

அன்று ஈராக்கை வைத்து
ஈரானுக்கு தொல்லைகொடுத்தாய் – இன்றோ
அங்கும் அணுவாயுதம் இருப்பதாய்
நாடகம் போடுகிறாய்
இப்போது உன் திட்டம்
உலகம் உணர்ந்து விட்டது
உன் போலி போலிஸ் வேலைக்கு
உலகம் இடம் தராது!
இதை எண்ண மறந்தாயானால்
நீ இருக்கும் அரியணைக்கு
ஆயுள் மிகமிக நெருக்கமாகக்
குவியும் வீழ்ச்சி!

வாழ்வின் பிடிப்பகன்று
சுமைகொண்ட துயரில் கரைகிறாய்
தினமும் நீ...
உலகசபை உரக்கச் சொன்னபோதும்
உனக்கேன் ஈராக்கில் பிடிவாத நிந்தனை?

நிர்பந்தங்களுக்காகவும்
போலி கௌரவத்திற்காகவும்
பணத்துக்காகவும் நேசிக்கிறாய்...

சாலை மரணத்தோடு கை குலுக்க
யாருக்குத்தான் துணிவு வரும்!
அதனால்தான் உன்னோடு கூடியிருந்தவர்கள்
உன்னைத் தள்ளிவிட்டுவிட்டு
எட்டச் செல்கிறார்கள் என்பதைத் தெரிந்தும்
ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறாய்?

ஒரு நேசிப்புக்காகவும்
மரணத்தை உன்னால்
புரிந்து கொள்ள முடிகிறதா?
மரணமும் ஜனனமும் வெவ்வேறானவை அல்ல
ஒரே ஊசியில் இரண்டு முனைகள்
மானிட வாழ்க்கையும் அப்படியே
எதிரியும் அதே நிலையில்தான்
மரணத்தை எதிர்பார்த்து
அவர்கள் வாழவில்லை

உன்னால் பாதியில்
மரணிக்கப் போகின்றவர்கள் இவர்கள்
சாகின்றவர்கள் அப்பாவி மக்களும்
இருநாட்டுப் படைகளும் தான்...
நீயோ அவனோ அல்ல!

மரணத்தை எதிர்பார்த்து வாழாத இவர்கள்
உன் ஆணவத்தால் உன் பிடிவாதத்தால்
மரணிக்கிறார்கள் துடிதுடித்து
உன் தேடலும் திட்டமும்
எதுவரை நீள்கின்றது...

உனக்குள் இருளில் இருக்கும்
அந்த நான் என்ற கொடிய அரக்கன்
உனக்குள் உள்ளவரை நீ எப்படி
எப்போது மனிதனாகப் போகிறாய்?

இப்போது சொல்? நீ மனிதனா? மிருகமா?
ஈரான் பற்றியும் இன்னும் உந்தன் நினைப்பா
மனித நேயம் உள்ளவனே உலகை ஆளமுடியும்
உன்னால்...? உன்னால்...? உன்னால்...?

**வேலணையூர் பொன்னண்ணா.**
டென்மார்க்.

# தாகமாயிருக்கிறேன்

## ஆ.டேவிட் கனகராஜ்

(காஞ்சிபுரத்தில் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் இவரது மூன்று சிறுகதைகள் "சாரம்" என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இவர் சமீபத்தில் எழுதிய சிறுகதை இது)

**சமீபகாலமாக சிவநேசனின் அப்பா பேச்சில்** நிறைய மாற்றம்தான்.

"ஏண்டி அதத்தவிர வேற பேச்சே இல்லையா உனக்கு? போவட்டும்டி அங்க மட்டுமின்னா கெட்டதையாச் சொல்லிக் கொடுக்கப் போறாங்க, நாம கும்புடுல முப்பத்து முக்கோடி கடவுளு அத மாதிரி அது ஒரு கடவுளு. அதக் கும்பிட்டாத்தான் அவனுக்கு நல்லாகீதுன்னா கும்டுனு போவட்டுமே. அதப்போயி பெர்சா பேசினுகீறியே."

சிவநேசன் வெகுகாலமாய் அப்பாவிடமிருந்து இதைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். மற்றவர்களைச் சம்மதிக்க வைப்பதில் அவ்வளவாய்ச் சிரமமிருக்காது.

சிவநேசனின் பெற்றோர் இந்த மாற்றத்தை விரும்பாமல் போவதற்கு நியாயமான காரணம் இல்லாவிட்டாலும், இதுவரை அவர்கள் இரத்த பந்தத்தில் ஒருவர் கூட மாறியதில்லை. எனவேதான் அவ்வளவு எளிதில் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தான் செய்வதில் எந்தத் தவறுமில்லை என்பது சிவநேசனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், பெற்றவர்களும் மற்றவர்களும் மனம் நோகும்படி திடுதிப்பென்று போய் மதம் மாறி விட விரும்பவில்லை. இப்போது அதற்குத் தடையிருக்காது. அவர்கள் சம மதித்து விட்டார்கள் என்பதைவிட, அவன் விருப்பப்படியே விட்டு விட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த மாற்றத்திற்கு பீட்டருடனான நட்பு எந்த வகையிலும் காரணமாய் இல்லை. பீட்டரும் சிவநேசனும் ஊரிலுள்ள நடுநிலைப் பள்ளிவரை ஒன்றாகப் படித்தவர்கள். படிப்பும் அவ்வளவுதான்.

பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுத்த பாடல்களும், கதைகளும்தான் சிவநேசனை வெகுவாய்க் கவர்ந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சீர்திருத்தங்கள் தனக்கு அதிகமாய்ப் பிடித்திருப்பதாக அடிக்கடி சொல்லிக் கொள்வான். பீட்டர் பரம்பரை கிறிஸ்தவன்தான் ஆனாலும் சிவநேசனின் வற்புறுத்தலால்தான் ஆலயப் பணிகளில் ஈடுபடுவான்.

அந்தக் கிராமத்திருச்சபை இவர்கள் கையில் தான். சபை ஊழியர் ஆராதனைகள் மட்டுமே நடத்துவார். மற்ற எதிலும் தலையிடமாட்டார். எல்லாவற்றையும் இவர்கள் இருவரும் பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை. ஆலயத்தைப் பராமரிப்பது, கிறிஸ்மஸ் காலங்களில் மாதம் முழுவதும் ஊர் முழுக்க பஜனை செய்வது, காணிக்கையைச் சரிபார்த்து வரவு செலவு கணக்குப் பார்ப்பது, திருவிழாக்களை முன்னின்று நடத்துவது இப்படி அனைத்துமே இவர்கள்தான்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கும் சிவநேசன்தான் ஆலயத்தைச் சுத்தம் செய்து, மணி அடிப்பான். இதைத் தன் கடமையாகவே செய்து வந்தான். பீட்டர் மணி அடித்த பிறகுதான் வருவான். சபை ஊழியர் அடிக்கடி சொல்லுவார், "சிவநேசா இந்தச் சர்ச்சிக்கு நீ ஓடி ஓடி உழைக்கிற... ஆனா இன்னும் ஞானஸ்தானம் எடுக்கல, எடுக்கறதும் எடுக்காததும் உன் விருப்பமதான், இது உன் வீடு மாதிரி நீ எப்பவேணுமின்னாலும் வர்லாம், போலாம்" என்பார். இன்றைக்கு ஒரு புதிய தகவலையும் சேர்த்துச் சொன்னார், "அடுத்த மாதம் டவுன் சர்ச்சிக்கு பிஷப் வாராறாம் நீ விருப்பப்பட்டாச் சொல்லு. அவுருகிட்ட ஞானஸ்தானம் வாங்காதுக்கு கொடுத்து வைக்கனும். இப்ப அந்த

அதிர்ஷ்டம் உனக்கு இருக்குது உன் விருப்பம் தான்" என்றார். இனி சிவநேசனுக்குச் சொல்லவா வேண்டும் மகிழ்ச்சிதான்.

பீட்டர் விழுந்து எழுந்து தங்கச்சிக்குத் திரு மணம் ஏற்பாடு செய்தான். மாப்பிள்ளை வீடும் மிக வும் ஏழ்மையானதுதான். சிறிய குடிசை வீடு. அங் கேயே பந்தல் போட்டு செய்வதறகுக்கூட வசதி இல்லை. பத்து பேர் நிற்பதற்குக் கூட இடமில லாத நெருக்கமான சந்தில் இருந்தது.

சபை ஊழியர் ஆலோசனைப்படி டவுனில் இருக்கிற சஞ்சீவி அம்மாள் கல்யாண மண்டபத் தில் மொத்த வாடகையே 1500 ரூபாய்தானாம். இது மண்டபம் இல்லை. ஒரு பழைய காலத்து பெரிய வீடு. நமக்குப் போதுமானதாய் இருக்கும். ஈவினிங் மேரேஜ் என்பதால் 800 ரூபாய்தானாம். நம்மக் கஸ்டத்தச் சொன்னா நூறோ இருநூறோ குறைப்பாங்களாம். சர்ச் பீஸ் 250 ரூபாய்தானாம். நாம வீட்ல வச்சிக்கினாக்கூட சமயல் பாத்திர பண்டம் எல்லாம் டவுன்ல இருந்துதான் வாடகைக்கு எடுக்கனும். வந்துப்போற கணக்குப் பாத்தா மண்டபமே தேவலைபோல.

மாப்பிள்ளை வீட்டாரிடம் சொன்னால், "அதெல்லாம் எங்களுக்கு எந்த விபரமும் தெரியாது. நீங்களே பாத்துக்குங்க" என்று தயவாகத்தான் சொன் னார்கள்.

அவர்களும் பாவம்தான். மழை இல்லாததினால் வருமானம் குறைவுதான். எந்த விவரமும் தெரியா தவர்கள்தான். எனவே பீட்டரே இந்தச் செலவை யும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. மேற்படி கணக்குப்படி பீட்டர் எப்படியோ சுதாரித்து விட்டான். இதற்கு மேல் நூறு ரூபாய் அதிகமானாலும் பீட்டரால் புரட்ட முடியாது. ஏற் கெனவே வாங்கிய கடன் சுமையால் தாங்க முடி யாத கஷ்டத்தில் தவித்துக் கொண்டிருந்தான்.

இது எல்லாவற்றையும் சிவநேசன் கூடயி ருந்து செய்து கொண்டிருக்கிறான். பீட்டருக்கு ஒரேவொரு ஆறுதல் சிவநேசன் கூடயிருந்து தைரியம் சொல்வதுதான்.

சபை ஊழியரிடம் தேதியைக் குறித்துக் கொண்டு போய் முதலில் கல்யாண சத்திரம் 100 ரூபாய் குறைவாகவே முடித்துக் கொண்டார்கள். எதிர்பார்த்ததைவிடக் குறைவான வாடகையில் கிடைத்தது திருமணமே முடிந்து விட்ட மகிழ்ச் சியைக் கொடுத்தது. இனி ஆயா, சர்ச்தான்.

காலண்டரில் தேதியைப் பார்த்து குறித்துக் கொண்டே, "1000 ரூபாய் சர்ச் பீஸ், வீடியோ எடுத் தால் அது தனி..." என்று ஆயர் சொன்னதும் பீட்ட ருக்குத் தூக்கிப் போட்டது. இதயம் மூன்று மடங்கு வேகமாக அடித்துக் கொண்டது. இவன் எதிர் பார்த் ததற்கு நேர்மாறாக நடக்கும்போது அவனுடைய கலக்கம் ஞாயமானதுதான்.

வார்த்தைகள் வெளிவரவில்லை. மென்று முழுங்கி மெதுவாகக் கேட்டான்.

"ஐயா... 250 ரூபான்னு சொன்னாங்க...

"யார் சொன்னது? இதப்பாரு யாரோ சொன்ன தெல்லாம் வச்சிக்கினு கேக்காத. இங்க இதுக்கினு கமிட்டி இருக்குது. அதுல முடிவு பண்றதுதான். சும்மா யாரும் சொல்லிட முடியாது. 250 ரூபாய 1000 ரூபாவா மாத்தி எவ்வளவோ நாளாச்சி. ஏன் உங்க சபை ஊழியர் சொல்லலையா? அவருக்கு எங்க தெரியப் போவுது. அவுரு ஒழுங்காக் கூட்டத் துக்கு வந்தாத்தான தெரியும்."

"...இன்னும் சொல்லப்போனா இப்பத்துக்கு நா சொல்றதுக்கு ஒன்னுமே இல்ல. ஏன்னா இங்க எம் பீரியட் முடிஞ்சிப் போச்சி. இன்னும் இரண்டு நாள்ள நான் செயின்ட் தாமஸ் சர்ச்சிக்குப் போகப் போறன். வேணுமின்னா நீங்க செக்ரட்டரியைப் போயிப்பாருங்க... ஸ்கூல் முடிஞ்சதும் அவ்ளோ சீக்கிரமா போயிருக்கமாட்டார். ஸ்கூல்லதான் இருப்பார்..." என்று சொல்லிவிட்டு அவர் மக னோடு கேரம்போர்டு விளையாடத் தொடங்கி விட்டார்.

சிவநேசன் சைக்கிளை மிதித்துக் கொண்டு போனான். பீட்டர் தலை சைக்கிளைவிட வேக மாகச் சுற்றியது.

சந்தை மேட்டுக்கு எதிரில் குட்லக் மேல் நிலைப்பள்ளி என்று அரை வட்ட போர்டு வர வேற்றது. வெள்ளைக் கற்களால் கட்டப்பட்ட கட்ட டம் இன்றைக்கும் இளைமைச் சிரிப்போடு அழைத்தது.

நூற்றாண்டை ஞாபகப்படுத்தும் ஆலமரம். அதைச் சுற்றிலும் நீண்ட நெடிய 'ப' வடிவ வராண டாவின் மையப்பகுதியில் மூன்று நான்கு பேர், சிலர் முன்னாலும் சிலர் பின்னாலும் கைகளைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். எதிரே வெள்ளை வேட்டி சட்டை, பெரிய சோடாபுட்டி கண்ணாடி, கோல்டு ஸ்டாப் வாட்ச் சகிதமாக செக்ரட்டரி தேவன்பன் கைகளை நீட்டி நீட்டி பேசிக் கொண்டிருந்தார். பேசும்போது அடிக்கடி தன் சோடா புட்டிக் கண்ணாடியைச் சடாரென்று

கழட்டி மீண்டும் மாட்டிக் கொண்டிருந்தார்.

பீட்டரும் சிவநேசனும் சற்று தூரவே தள்ளி நின்றார்கள். சற்று நேரத்திற்குப் பின் செக்ரட்டரியின் பார்வை இவர்கள் பக்கம் திரும்பியது.

"யாருப்பா... இன்னா விஷயம்?"

"நாங்க கூடலூர்லயிருந்து வரோம் சார்..."

"இன்னா விஷயத்தச் சொல்லு"

"தங்கச்சிக்கு மேரேஜ் வச்சிருக்கோம் சார்..."

"சரி, ஐயரப்பாத்து பீஸ் கட்டிட்டுப்போங்க"

"அவரப் பாத்துட்டம் சார்... பீஸ்... விஷயமாத் தான் உங்களப் பாக்கலாம்னு..."

"இதல என்ன இன்னா பாக்கப்போறிங்க... சொல்லுங்க'...? என்று நக்கலாகவே சிரித்தார்.

"250 ரூபான்னு சொன்னாங்க சார். அத நம்பிதா வந்தம். 1000 ரூபான்னு எதிர்பாக்கல சார். கொஞ்சம் கொறச்சி உதவிப் பண்ணுங்க சார்..."

"ஆமாண்டா இங்க வந்தாத்தான் வந்துடும் உங்களுக்கு, கிராமத்திலயிருந்து வர்றோம்.... தல காஞ்சிப் போனவங்க... கஞ்சிக்கே வழியில்லனு. ஏண்டா நா தெரியாமத்தான் கேக்கறன்... உங்கள யெல்லாம் எவன்டா டவுன்ல வந்து கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அடிச்சது... அங்க எங்கனா கோயில் கொளத்துல தாலி கட்டிக்கினு போக வேண்டியதுதான... வந்துட்டானுங்க பொசா கேக்கறதுக்கு... ஏன்டா சர்ச்ச இன்னா இயேசு சாமி நேரா வானத்துல இருந்து கீழ எறக்கிட்டாரா? உங்களயெல்லாம் அதுல வச்சி தர்மத்துக்குத் தாலி கட்டி அனுப்பறதுக்கு? எவன் அப்பன் ஊட்டுப் பணத்தக் கொட்டி இதெல்லாம் பராமரிக்கிறது?" என்று அதற்காகவே காத்திருந்தவர் போலப் பொரிந்து தள்ளிவிட்டார்.

பீட்டர் சற்று கோபக்காரன்தான். "கோயில் கொளத்துல தாலி கட்டிக்னு போவ வேண்டியது தான" எதிர் பார்க்காத இந்த வார்த்தை அவன் உடலில் பல்வேறு ரசாயன மாற்றங்களை ஏற்படுத்தியதை சிவநேசன் அறிந்தவனாக பீட்டரின் கையைப் பிடித்து அழுத்தினான். அந்த அழுத்தம் ஆழமான அர்த்தத்தைக் கொடுத்ததால் சுவற்றில் அடித்த பந்தாக ஆயரிடம் திரும்பினார்கள்.

மெயின் கேட்டிலேயே ஆயரின் வெடிச் சிரிப்பு கேட்டது. கேரம் போர்டில் ஆழ்ந்து விட்டிருந்தார். தன் மகன் பலமுறை தவறாக ஆடிய பொழுதும் மீண்டும் அவன் ஆடுவதற்கு வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஆயரம்மா ஒரு கையில் கார்ட்லெஸ் போனையும், மறுகையில் சேருடன் வீட்டிலிருந்து வெளியே வந்துஉட்கார்ந்து கொண்டு 10 எணகளை அழுத்திக் காதில் வைத்துக் கொண்டார்கள்.

பீட்டரும் சிவநேசனும் வந்திருப்பதை அறிந்திருந்தும் அடுத்த ஆட்டம் முடிந்த பிறகே இவர்களிடம் பேசினார் ஆயர்.

"என்னாச்சிப்பா, பாத்திங்களா அவரை"

பீட்டருக்கு கண்கள் கலங்கிவிட்டன. எச்சிலை கஷ்டத்தோடு விழுங்கிக் கொண்டிருந்தான. வார்த்தைகள் வரவில்லை. இவன் கலக்கத்திற்கு காரணம் ஒருவேளை இதற்கு மேலும் ஆயரிடமிருந்து உதவியையும், அன்பையும் பரிவையும் எதிர்பார்த்திருக்கலாம்.

சிவநேசன்தான் நடந்தவற்றைக் கூறினான்.

"நாந்தான் சொன்னனப்பா அத ஒன்னும் பண்ண முடியாதுன்னு" என்றார் ஆயர்.

ஆயரம்மா இன்னும் போனில் பேசிக் கொணடேதான் இருந்தார்கள். யார் வீட்டுக்கோ பிரேயர் மீட்டிங்கிற்குப் போய் விட்டதால் மெட்டி ஒலி டிவி சீரியல் பாக்க முடியாமல் போய் விட்டதாம். அது என்ன ஆனது என்று எதிர் முனையில் பேசுபவரிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதுவரை சிவநேசன் காதில் விழுந்தவற்றில் மெட்டிஒலி ஆயரம்மாவைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

செக்ரட்டரி டி.விஎஸ் 50 யில் வந்திறங்கினார்.

ஆயரம்மா போனில் பேசிக்கொண்டே லேசாக எழுந்து "ஸ்தோத்திரம் ஐயா" என்றார்.

செக்ரட்டரி பதற்றத்துடன் "ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம்... உக்காருங்க என்ன போன்ல அப்பா அம்மாகிட்டையா? டெய்லியும் அவங்கிட்ட பேசலன்னா தூங்கமாட்டிங்க போல. அதுக்குத்தான் ஒரு பொம்பளப்பொண்ணு இருக்கனும்னு சொல்றது. கட்னவூட்டுக்குப் போனாக்கூட சுத்திச் சுத்தி அப்பா அம்மாகிட்டய பாசம் இருக்கும். பேசுங்க... பேசுங்க நேர்ல பாத்துப் பேசனும்னா முடியுமா? இந்தக் கோடியிருந்து அந்தக் கோடிக்குப் போன கையோட திரும்பிட்டாக் கூட ரெண்டு மூனு நாளாவும். அடாடா... இந்த டெலிபோன் இன்னா... கண்டுபிடிப்பு. இது வந்ததுனால எல்லாத்துக்கும் சௌகரியமாப் போச்சு..." என்று சிலாகித்துப் பேசிக் கொண்டு ஆயரிடம் வந்தார்.

ஆயர் செக்ரட்டரியிடம் பீட்டரைக் காட்டி"

இன்னாங்கய்யா இந்த கேஸ்...” என்றார்.

“என்னக் கேட்டா? அதவுடுங்க ஆக வேண்டிய வேலையைப் பாக்கலாம். அந்த டெலிபோன் பில்லையும், இ.பி பில்லையும் எடுத்துக்னு வரச் சொல்லுங்க. செக் போடணும். இந்த செக்ஸ்டன் பையன் (ஆலயப்பணியாள்) மறந்து விட்டுடுவான்...” என்றார்.

சிவநேசனுக்கு இப்போதுதான் புரிந்தது. ஆயரம்மாவின் நீண்ட டெலிபோன் உரையாடலும், ஆளே இல்லாத பெரிய ஹாலில் இரண்டு ஃபேன்கள் ஓடிக் கொண்டிருந்ததும்.

வேறு வழியில்லாமல் 1000 ரூபாய்க்கு ஒத்துக் கொண்டார்கள். பில் எழுதிக் கொண்டே ஆயர் சொன்னார், “மேரேஜ் பீஸ தனி. அத மேரேஜ் அன்னிக்குத் தந்தாப் போதும்.” என்றார்.

ஒரு டெம்போ வந்து நின்றது.

“டைனிங் டேபிள் செட் வந்துகீது” என்று வந்தவன் சொன்னான்.

செக்ரட்டரி பரபரப்பானார். “எப்போ... புக் பண்ணதுப்பா இப்பத்தான் எடுத்துணுவற? எறக்கு... எறக்கு பத்திரமாப் பாத்து எறக்கு, கீறல் கீறல் விழுந்திடப் போவது” என்றார். தேக்குமரம் வார்னிஷில் மின்னியது.

“மொதல்ல அத எறக்குய்யா...”

ஆளுயரக் கண்ணாடி பதிக்கப்பட்ட ட்ரெஸ்ஸிங் டேபிள் இறக்கப்பட்டது.

“ஐயம்மா உங்களுக்கு எந்தக் கொறையும் வைக்கல. நீங்க கேட்ட ட்ரெஸ்ஸிங் டேபிள் கூட வாங்கிட்டன். சர்ப்பிரைசா இருக்கட்டுமேன்னுதான் சொல்லல. இன்னா... கமிட்டியில் முடிவு பண்ணதவிட ஒரு 1500 ரூபா கூட ஆயிப்போச்சி. பரவால்ல. அத கமிட்டியில நா பாத்துக்கறன். நீங்க எந்த ஊருக்குப் போனாலும் எங்க ஞாபகமா இது இருக்கும் அதுக்குத்தான்” என்று பல்லைக் காட்டினார்.

சிவநேசன் கண்ணாடியை எட்டிப் பார்த்தான். இப்போது அவனுடைய முகம் அவனுக்கு அருவருப்பாய்த் தெரிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. 9 மணி ஆகியும் ஆலயமணி ஒலிக்கவே இல்லை. பீட்டர் சிவநேசனைத் தேடிப்போனான்.

தோளில் மண்வெட்டியை மாட்டிக் கொண்டு மிக தூரத்தில் வயலை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சிவநேசன்.

■■■

## அலைந்த மனம்

ஆலயங்கள் தேடி அலைந்தது
ஒரு மனம்
ஆனால் தொடர முடியவில்லை
ஏன்?

வாழ்வென்பது போராடி வாழும்
ஒரு போர்க்களம்.

திரும்பவும் அலைந்தது அம்மனம்
நிம்மதியைத் தேடி...

சமூகமே கேட்டது
நிம்தியென்றால் என்னவென்று...

சலிக்காத அம்மனம்
மீண்டும் சுற்றியது
தீர்மானித்தது.
வாழ்க்கை என்பது
என் மனதின் அமைதியே.

புரிந்துகொண்ட அம்மனம்
ஓரிடத்திலமர்ந்து
தன்னைப் பற்றிச் சிந்தித்தது.
தீர்மானமும் எடுத்தது.

சந்தோஷமே வாழ்க்கை
அதிலொரு சிறு பகுதியே கவலை.

கவலையே வாழ்க்கையல்ல

புரிந்து கொண்ட அம்மனம்
திரும்பவும் அலைந்தது

வேறொரு மனதிற்கு
ஆறுதல் கூற...

**- சிந்து (ஈழம்)**
**23.09.06**

### கரைந்து போகுதல்

உன் வருகை எதிர்பார்த்து
பெரும் சமுத்திரம் முன்
சில ரகசியங்களோடு
காத்திருந்தேன்.

அலைகள் கழுவிப்போகும்
கரைகளுக்குப் பதிலாக என்
கால்களை நனையவிட்டேன்

ஆழ்கடல் அமைதிக்கு என்
கொலுசுகளை வீசியெறிந்தேன்

அலைக் குழந்தைகள் விளையாட என்
வளையல்களைப் பரிசளித்தேன்

நாடோடி மேகங்களுக்குத் துணையாக
என்னிரு விழிகளையும்
வான் கடலில் மிதக்க விட்டேன்

காற்றோடு உரையாட என்
மொழியினை வாரிவிட்டேன்

பறவைகளோடு பறந்துபோக
என் கைகளைவெட்டி எறிந்தேன்
நீல ஆகாசத்தில் என்னை முழுதாய்க்
கரைத்து விட்டேன்

நீண்ட நேரத்திற்குப் பின்
நீ வந்திருப்பாய்
துண்டு துண்டாக
நானிருப்பதறியாது
எங்கெல்லாமோ தேடித் தேடி
என்னைத் திட்டித் திரும்பியிருப்பாய்

என் வருத்தமெல்லாம்
காதலில் கரைந்து போகுதல்
தெரியா உனக்கெதற்கு
காதல் ?

**- கனிவுமதி.**



பாரிசில் இருந்து கலை இலக்கியப் பணி புரிந்துவரும் **"கவிஞர் வண்ணை தெய்வம்"** வட இலங்கை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலை ஆர்வம் மிகுந்த கவிஞர். புலம் பெயர முன்னமேயே 'சாட்டை' எனும் பத்திரிக்கையை நடத்தியவர். பல கலைஞர்களோடு அன்று போல இன்றும் நட்பை பேணிவருபவர்.

இவரின் நூல்கள் :

**கலைத்துறையில் இரு மலர்கள்**
**கதாநாயகன்**
**கலைப்பாதையில் இவர்**
**ஏகாந்தல் மரங்களாய்**
**விடிவை நோக்கி**
**பொல்லாத மனிதர்கள்**
**காலங்கள் வாழத்தும்**
**ஈழத்து 300 கலைஞர்கள்**
**வானலையில் எங்கள் கவிதைகள்**
**(பாகம்-1- 2)**

A.B.C. வானொலி, ஐரோப்பிய தமிழ் வானொலிகளிலே தன் பங்களிப்பை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாரிசில் வாழ்ந்துவரும் வண்ணை தெய்வம் *'சிரித்திடு'* சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இருந்திருக்கிறார். *'வண்ணை'* எனும் சிறுவர் பத்திரிக்கையையும் நடத்தி வருகிறார்.

அவரின் முயற்சிகள் தொடர்வதற்கு *காற்று வெளி*யும் வாழ்த்துகிறது.

# பயணங்கள்

## பாரதி ஜிப்ரான்

**செங்கல்பட்டுக்கு அருகில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த பாரதி ஜிப்ரான் அடிப்படையில் ஒரு கவிஞர். *'மௌனப்பயணி'* *'மழைதினம்'* *'முன் பனிக்காலம்'* என மூன்று கவிதைத் தொகுப்புகள் வெளியாகி உள்ளன. இவரது சில சிறுகதைகள் சிற்றிதழ்களில் பிரசுரம் பெற்றுள்ளன. தற்போது திரைப்பட மொன்றில் உதவி இயக்குனராகப் பணியாற்றுகிறார்**

**நடத்துனரின் விசில் சத்தம் அனைவரின்** காதுகளையும் அடையச் செய்தது.

விசில் சத்தம் கேட்டவுடனே ஓட்டுனர் பேருந்தை இயக்க ஆரம்பித்தார். அவர் பேருந்தை இயக்குவதற்குள் ஒரு நொடியில் அந்த இடமே புகை மண்டலம் போல் ஆகிவிட்டது.

பொதுவாகவே நகரப் பேருந்து என்றாலே புகை கக்கும்.அதிலும் புறநகர் அல்லது கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளை நாம் பேருந்து என்றே சொல்ல வேண்டாம். புகை வண்டி என்று சொன்னால் பொருத்தமாய் இருக்கும். நம் நாட்டில் புகை வண்டிகளெல்லாம் மின்சார இரயில்களாய் மாறி தண்டவாளங்களில் ஓடும் நாட்களில் பேருந்துகளில் பாதி புகைவண்டியாய் மாறி ஊரையே சுவாசிக்க விடாமல் செய்து விடுகிறது.

அந்த ஓட்டுனர் பேருந்தை பத்தடி நகர்த்து வதற்குள் வண்டி பத்து முக்கு முக்கி விட்டது. பேருந்தின் அருகே நின்றவர்கள் முகத்தை மூடிக் கொண்டு ஓட்டுனரைத் திட்ட ஆரம்பித்தனர். ஓட்டுனர் ஒருவழியாய் பேருந்து நிலையத்தை விட்டு வெளியே கொண்டு வந்தார்.

பேருந்துக்குள் இப்போது எப்படியும் எண்பது முதல் தொண்ணூறு பேர் இருக்கக் கூடும். ஒரு பேருந்தில் அதுவும் கிராமத்திற்குச் செல்லும் பேருந்தில் ஏன் இவ்வளவு கூட்டம் என்று உங்களுக்குள் கேள்வி உண்டாகலாம். எப்போதும் இதில் இவ்வளவு கூட்டம் இருப்பது இல்லை. பொதுவாய் ஆடிமாதத்தில் அதுவும் வெள்ளி – ஞாயிறு என இரு தினங்களில் மட்டும் கூட்டம் நிரம்பி வழியும். இந்தப் பேருந்து இந்த நகருக்கு அருகே இருக்கும் சிறப்புமிக்க அம்மன் கோவிலுக்குச் செல்லும் பேருந்து. எனவே பல ஊர்களில் இருந்தும் மக்கள் கோவிலுக்குப் பல வாகனங்களில் வருவதென்பது ஆண்டுதோறும் ஆடி மாதம் இயல்பான ஒன்று. இப்போது இந்தப் பேருந்தின் உள்ளே அப்பிக் கொண்டிருக்கும் கூட்டத்தில் தொண்ணூறு சதவீத மக்கள் கோவிலுக்குச் செல்லும் மக்கள். மீதம் உள்ள பத்து சதவீதம் பேர் வழியில் உள்ள கிராமத்து மக்கள். இந்தப் பேருந்து மட்டுமின்றி பல பேருந்துகள் இயங்கும். பல பேருந்துகள் மட்டுமின்றி பல வாகனங்களும் செல்லும். பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் பாதை அது. அந்தப் பாதையை நினைக்கும் போதே அந்த வழியில் பயணம் செய்த பலருக்குப் பயம் வரும். அந்த அளவு பள்ளம் நிரம்பிய பாதை அது. இங்கிருந்து ஒரு நான்கு கிலோமீட்டர் தான் தேசிய நெடுஞ் சாலை. தேசிய நெடுஞ்சாலையில் போகும் போதே இந்தப் பேருந்து மூச்சு விட்டுத்தான் நகரும். ஆனால் அங்கிருந்து ஆறு கிலோமீட்டர் உள்ளே பிரியும் கிராமத்துச் சாலை. அதையும் இன்னும் சிலர் தார் ரோடு என்றுதான் சொல்லிக் கொண்டி ருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரை அந்தச் சாலைக்குத் தார் விட்டதாய்த் தகவல்

இல்லை. ஞாபகமும் இல்லை. ஒரு வேளை தார் கண்டு பிடித்த காலத்தில் போடப்பட்ட சாலையாகவும் இருக்கலாம். அது தார்சாலைதான் என்பதற்கான அடையாளங்கள் எதுவுமில்லை. பெரும்பகுதி குண்டும் குழியும். குழி என்றால் மிகவும் மோசமான குழி. விழுந்தால் விழுந்தவன் எழமாட்டான். அந்த அளவு பெரிய குழி. என்னதான் புகை கக்காத புத்தம் புதிய பேருந்துகளையே இங்கு அனுப்பினாலும் அவ்வளவுதான். முதல் நாளே கலகலத்துவிடும். அந்த அளவுக்கு ஒரு பேருந்தை நடனமாட வைக்கும் ஆற்றல் படைத்த சாலை அது.

தார் இல்லாத சாலைகளால் இன்னும் எத்தனையோ தொல்லைகள் மனிதர்களுக்கு. வாகனம் செல்லும்போதெல்லாம் சாலைகளில் படிந்து கிடக்கும் புழுதி பறக்கும். அந்தப் புழுதிகள் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கும், பேருந்துப் பயணிகளுக்கும் பெரிய இடையூறாக அமையும். பொதுவாய் கிராமத்து மனிதர்கள் கைக்குட்டை நாகரிகம் அதிகம் அறியாதவர்கள். கைக்குட்டை இருந்தாலாவது உடனே எடுத்து மூக்கை மூடிக் கொள்ளலாம். கைக்குட்டை இல்லாத காரணத்தினால் அனைவரும் புழுதியைச் சுவாசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டனர்.

அந்தச் சாலையின் பயன்பாடு மிகப் பெரியது. அந்தச் சாலையின் வழியாகத்தான் நான்கு கிராமத்து மக்களும் நகரத்திற்குச் செல்கிறார்கள். இதில் பலர் பணிகளுக்காகச் செல்கின்றனர். பலர் கடைத் தெருவில் பொருட்கள் வாங்கச் செல்கின்றனர். இதைவிட மிக முக்கியமான ஒன்று நூற்றுக் கணக்கான குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்கின்றனர். பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள் தினம் அந்த வழியே வரும் ஒரே பேருந்தில்தான் செல்ல வேண்டும். அந்த ஒரு பேருந்தும் சாலைப் பழுதைக் காரணம் காட்டி மாதத்தில் பல நாட்கள் வராமல் நின்று விடுவதுண்டு. பல குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அதிகம் விடுமுறை எடுக்க வைத்த பெருமை இந்தப் பேருந்தையும், இந்தக் கேடு கெட்ட சாலையையுமே சேரும்.

பள்ளிக்கூட வேலை நாட்களில் சரியாய் வராத இந்தப் பேருந்து ஆடி மாதத்தில் மட்டும் சரியாய் வரும். நிறைய வரும். ஆடி மாதம் அந்தக் கோவில் திருவிழா. மக்கள் மொத்தமும் மந்தை மந்தையாய் வரும். இதை வைத்து போக்குவரத்துக் கழகம், காசு சம்பாதிக்க நினைத்ததே தவிர சாலையைச் செப்பனிட நினைக்கவில்லை. அவர்களும் இந்த ஒரு மாதம் சாலை சரியானால் போதும் என நினைத்து ஏரி மண்ணை அள்ளி வந்து சாலை பள்ளங்களில் நிறைத்து ரோடு ரோலரை வைத்து மிதித்து சாலை ஓட்டைகளை அடைப்பார்கள். ஆனால் திடீரென்று மழை பெய்தால் சாலை பழைய நிலையை விட மிகவும் மோசமாகிவிடும். ஆனால் இந்தப் பள்ளத்தில் மண் கொட்டுவதில் கூட ஒரு லட்சம் வரை லாபம் பார்த்து விடுவார்கள் அதிகாரிகளும், உள்ளூர் அரசியல்வாதிகளும். மக்களுக்குத் துளியேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எவனுக்கும் இல்லை.

தேசிய நெடுஞ்சாலையில் மிதமான வேகத்தில் பேருந்து சென்று கொண்டிருந்தது. ஒரு நிறுத்தத்தில் நிறைய கூட்டம். அவர்கள் கையில் இருந்த கூடை, மஞ்சள் உடை, சிலரின் அலங்காரம் அதனை வைத்து எளிதில் சொல்லி விடலாம் அவர்கள் அனைவரும் கோவிலுக்குச் செல்பவர்கள். அதுவும் இந்தப் பேருந்திற்காகக் காத்திருப்பவர்கள் என்று.

பேருந்தில் கூட்டம் நிரம்பி இருப்பதனால் இந்த நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்தாமலே வேகமாய்ச் சென்றார் ஓட்டுனர். நிறுத்தத்தில் இருந்த மக்கள் கூட்டம் 'ஏய்' என கூட்டமாய்க் கத்தினர். சில இளைஞர்கள் ஓடி ஏறும் முயற்சியில் பேருந்தைத் துரத்தினர். அதில் சிலர் பேருந்தை ஓடிய படியே தன் கைகளாலும். கால்களாலும் அடித்தனர். பேருந்து வேகமாய்ச் சென்றது.

"ங்கோத்தா... பாடு... நிறுத்தாமப் போறாண்டா..." என்று ஒரு இளைஞன் தன் நண்பனிடம் சொன்னபடியே ஓடிய களைப்போடு பேருந்து நிறுத்தத்தை நோக்கித் திரும்பி வந்தான்.

மக்களை நிரப்பிக் கொண்டதால் அந்தப் பேருந்து தொடர்ந்து வேகமாய்ச் செல்ல இயலவில்லை. நகர்ந்தபடியே சென்ற பேருந்தின் உள்ளே ஒரே பேச்சுச் சப்தம். பேருந்தின் படிக் கட்டில் நின்ற இளைஞர்களின் குரல் உள்ளே இருக்கும் மக்களை இன்னும் கொஞ்சம் உள்ளே போகச் சொல்லிக்கொண்டிருந்தது. உள்ளேயிருந்த

யாரும் அவர்களின் குரல்களைக் கேட்பதா யில்லை. ஏற்கெனவே மக்கள் ஒருவர் மேல் ஒருவர் அப்பியபடியே நின்று கொண்டிருந்தனர்.

பேருந்தில் இருந்த கூட்டம் பேச்சுச் சப்தத்தில் மூழ்கியது. ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் ஆதங்கத்துடன் பேச ஆரம்பித்தாள்..

"இன்னாங்க இது பஸ்சுல இவ்ளோ கூட்டம் இருக்குதே, நிறுத்தாட்டியும் டிரைவரை அடிக்க ஓடியாரானுங்க பேமானிப் பசங்க..." பேச்சுக் குரல்கள் மொத்தம் ஒன்று சேர்ந்து ஒரு சந்தைக் கடையை பேருந்தின் உள்ளே கொண்டு வந்து விட்டனர்.

பேருந்தில் கூட்ட நெரிசலில் வெகு நேரமாய்ச் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த கனியப்பனை ஒரு வெள்ளைச் சட்டை மனிதர் தன் மகளைத் தன் மடிமீது அமரவைத்துக் கொண்டு, மகள் உட்கார்ந்து இருந்த இடத்தில் உட்கார அழைத்தார். கனியப்பன் இடம் கிடைத்த மகிழ்ச்சியில் அமர்ந்தார். வயது முதிர்ந்த கன்னியப்பன் உள்ளூர் மனிதர். வாரத்தில் இரண்டு மூன்று முறை நகரத்திற்கு வந்து செல்வார். இருக்கையில் அமர்ந்தபின் தன் தோளில் இருந்த துண்டினால் முகம் துடைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்தவரிடம் பேச ஆரம்பித்தார்.

"...இன்னைக்குன்னா இந்தக் கய்தைங்க இன்னும் ரெண்டு பஸ் அதிகமா வுட்டா இன்னா குறையுது. எட்டணா இருந்த பஸ் ஸ்பேர மூன் ரூபாவா ஆக்கிட்டானுங்க. ங்நோத்தா ரோடு சரியில்ல. பஸ்சும் சரி இல்ல..." தன் மனதில் இருந்ததை வார்த்தைகளாய்க் கொட்டிக் கொண்டிருந்த கன்னியப்பனைக் கவனித்துக் கொண்டிருந்த பக்கத்து இருக்கை மனிதர் மெதுவாய் அவரிடம் பேச ஆரம்பித்தார்.

"நீங்க இந்த ஊரா ?"

"ஆமாங்க"

"கோயில் கிட்டயா உங்க வீடு ?"

"ஊகூம்... அதுக்கு முன்னாடியே, நான் எறங்கி முனாவது ஸ்டாப்பிங்தான் கோயில்"

"இப்ப ஆத்துல தண்ணி போவுதா,"

"ஊகூம்... எங்க போவுது ? தெனம் தெனம் லாரி லாரியா மண்ணுதான் போவுது. மழ பேஞ்சா காவால போறா போல போவும்."

"கொழந்தக்கு மொட்ட அடிக்கணும். அதான் கேட்டன்"

"ஊம்... அதெல்லாம் தண்ணி இருக்கு... குட்ட மாதிரி இருக்க தண்ணிய மொண்டு ஊத்த நிறய ஆள் இருக்குது. நீங்க நல்லாக் குளிச்சிட்டு வரலாம்."

மிதமான வேகத்தில் பேருந்து சென்று கொண்டிருந்தது. வெளியே சாலை ஓரங்களில் புளிய மர நிழலில் மஞ்சள் உடை கட்டி இருந்த மக்கள் ஓய்வாய் உட்கார்ந்திருந்தனர். சிலர் நடந்து சென்று கொண்டிருந்தனர். இவர்களின் ஆடை களை வைத்தே எளிதாய்ச் சொல்லி விடலாம் இவர்கள் கோவிலுக்குச் செல்பவர்கள்தான் என்று. அதுவும் அந்த அம்மன் கோவிலின் முக்கிய ஆடை இந்த மஞ்சள் என்பது இப் பகுதியில் உள்ள அனைவருக்கும் தெரியும்.

எதிரே ஒரு கூட்டம் சாமியாடியபடி வந்தது. கூட்டத்தினர் அனைவரும் மஞ்சள் உடையோடு தான இருந்தனர். சில ஆண்கள் மஞ்சள் ஆடை இல்லாத காரணத்தினால் வெள்ளை பனியனில் மஞ்சளை அரைத்துப் பூசி யிருந்தார்கள். இந்தக் கூட்டத்தின் வருகையால் சாலையில் போக்கு வரத்து தடைப்பட்டது. மிதமான வேகத்தில் வந்த பேருந்து நின்று விட்டது.

ஓ... ஆ... ஆ... ஆ... வென பலமான குரல்கள் பேருந்தின் வெளியே ஒலித்தது. அந்த மஞ்சள் ஆடைக் கூட்டம் சாமியாடியபடியும் இப்படி ஓ... ஓ...வெனக் கத்திக் கொண்டும் பேருந்தைக் கடந்து சென்றது. பேருந்தின் உள்ளிருந்த பயணிகள் மஞ்சள் உடைக் கூட்டத்தைப் பார்த்துக் கன்னத்தில் பக்தியுடன் சின்னதாய் அடிகளை போட்டுக் கொண்டனர். அந்த மஞ்சள் ஆடைக் கூட்டத்தில் சில இளைஞர்கள் வேட்டியை இருக்கிக் கட்டியபடியே ஓடி வந்தனர். நின்று கொண்டிருந்த பேருந்து பயணிகளிடம் நிதி வசூலிக்க, அவர்கள் கையில் பெரிய சில்வர் குடம். அதன் வாயை மஞ்சள் துணியால் மூடி, சின்ன அந்தக் குடத்திற்கு இரண்டு மூன்று முழம் பூவையும் சுற்றி வைத்திருந் தனர். சன்னல் ஓரப் பயணிகள் காதருகே வந்து உண்டியலைக் குலுக்கிக் குலுக்கி காசு கேட்டனர். நிறைய

பயணிகள் குடத்தில் சுற்றி வைத்திருந்த பூவைத் தொட்டு வணங்கிக் காசு போட்டனர். ஒரு பயணி குடத்தில் சுற்றி இருந்த ஒரு பூவை எடுத்துத் தன் கணகளில் ஒத்தி சட்டைப்பையில் வைத்துக் கொண்டான்.

இப்போது கூட்டம் முழுவதுமாய்ப் பேருந்து கடந்து சென்று விட்டது. உண்டியல் குலுக்கியவர் களும் இல்லை. ஓட்டுனர் பேருந்தை மெதுவாய் இயக்கினார். மெதுவாய் நகர்ந்தது பேருந்து. உள்ளே இருந்த ஒருவன் வேகமாய்க் குரல் கொடுத்தான்.

“யேய் மயிர் டிரைவர்ரா இவுரு... காத்தே வரல, அங்கங்க நிறுத்துராரு. மாட்டு வண்டி ஓட்டினவன் லாம் பஸ் ஓட்டுனா இதாம்பா”

கூட்ட நெரிசலில் கூச்சல். இவைகளில் பயணிகள் சொல்லும் கடுஞ்சொல் எதுவும் ஓட்டு னரின் காதுக்குப் போய்ச் சேரவில்லை. தேசிய நெடுஞ்சாலையில் பயணப்பட்ட பேருந்து சின்னச் சின்ன சாலை பள்ளங்களில் ஏறி இறங்கி குலுங்கி யது. கன்னியப்பனிடம் வெள்ளைச் சட்டை மனிதர் கேட்டார், “என்னங்க இது ரோடு...? இவ்ள மோசமா இருக்குது?”

“இதுக்கே இப்படின்னா அந்த ரோட்ல வண்டி போவட்டும் அப்ரம் சொல்லு...”

கன்னியப்பனின் பேச்சு அவரை அமைதி யாக்கியது.

வெள்ளைச் சட்டை மனிதரின் குழந்தை அவ ரிடம் தண்ணீர் கேட்டாள். “ந்தா... நான் என்னமமா செய்யட்டும். இந்தக் கூட்டத்துல உங்கம்மா சொல்லச் சொல்ல முன்னாடி போய் உக்காந்துட்டா. அவக்கிட்டதான் பை இருக்குது. கொஞ்சம் இரு கோயில் வந்ததும் தண்ணி எடுத்துத் தரன்...”

“இன்னாப்பா... கொயந்த தண்ணி கேக்குது. அதுக்குப் போய்ச சாக்கு சொல்றிய...” கன்னியப் பனின் கேள்விக்குப் பின் அமைதியானார் அவர்.

“ஏம்பா இந்தக் கொயந்திக்கா மொட்ட அடிக்க ணும்னு சொன்ன...”

“ஆமாங்க...”

“கொயந்த பேர் என்னப்பா?”

“உமாமகேஸ்வரி”

கன்னியப்பன் அந்த வெள்ளைச் சட்டை மனித ரிடம் பேசியபடியே வந்தார். அவர்களின் பேச்சுக்கு நடுவே ஒரு சத்தம் அவர்களின் பேச்சைத் தடை செய்தது. கன்னியப்பன் சத்தம் வந்த திசையைக் கூர்ந்து கவனித்தார். அது அந்த வெள்ளைச் சட்டை மனிதரின் இருக்கையின் கீழ் இருந்து வந்தது. அவர் இருக்கையின் கீழ் ஒரு பெரிய வயர் கூடை. அதன் கைப்பிடி. இரண்டும் ஒன்றாய்க் கட்டப்பட்டு இருந்தது. அதன் உள்ளே இருந்து ‘க்கர்’ ‘க்கர்’ எனச் சத்தம். இதைக் கவனித்த கன்னியப்பன் வெள்ளைச் சட்டை மனிதரிடம் விசாரித்தார்.

“இன்னாதுப்பா இதுல”?

“கோவிலுக்கு நேந்து விட்ட காவச சேவல்” என பதில் சொல்லி மெல்லிய புன்னகையும் பூத்தார் வெள்ளைச் சட்டை மனிதர்.

பேருந்து தேசிய நெடுஞ்சாலையில் இருந்து மாறி கோவிலுக்குச் செல்லும் கிராமத்துச் சாலையில் பயணப்பட்டது. இதுவரை சீராய்ச் சென்ற பேருந்து இப்போது எகிறி எகிறிக் குதிக்கத் தொடங்கியது. உள்ளே ஒரே கூச்சல்.

“யேய்... யேய்... எம்மா... எம்மா...”

“யப்பா... இன்னாடியம்மா இது”

அடப்பாவிங்களே ரோட்ட போட்டாத்தான் இன்னா”

குண்டும் குழியும் நிரம்பிய அந்தச் சாலையில் பேருந்து மெதுவாய்ச் சென்றது. உள்ளே மக்கள் சலசலப்பு விமர்சனத்தில் இறங்கினர்.

“இன்னாப்பா இது... பஸ்சு மட்டும் ஸ்பெஷல் பஸ்சுன்னு டிக்கட் வில்ய ஏத்திப்புட்டாப் போதுமா? ரோடே இல்லாம... ங்கோத்தா மயிர்லயா பஸ் போவும்...”

ஒருவர் உணாவு பொங்க பக்கத்து இருக்கை நணபரிடம் பேசித் தீர்த்தார்.

வெளியூரில் இருந்து கோவிலுக்குச் செல்லும் பெண் ஒருத்தி தன்னுடன் வந்த பெண்ணைப் பார்த்து படபடவெனச் சொன்னாள், “இன்னாடிம்மா ஜனங்க இந்த ரோட்ட வுட்டுட்டுக் கெடக்குதுங் களே...” அவள் முடிப்பதற்குள் உள்ளூர் பெண் ஒருத்தி தொடங்கினாள், “க்கூம்... எங்களுக்குத்

தான் ஆச. தெனம் இந்த நாதாரி ரோட்டுலப் போவ னுன்னு. எம்மா மனு குடுத்தம். எம்மாம் போராட்டம் செஞ்சம். எதயும் எந்தத் தேவடியாப் பெத்ததும் காதுலயே வாங்கல. நாங்க இன்னாம்மா செய்வம். ஓட்டுக் கேட்ட கய்திங்கதான் ரோட்ட போடணும். இனி எவனாவது எலக்ஷன் கிலக்ஷன்னு வரட்டும்... சூத்து மேலயே தொடப்பத்தால அடிச்சி அனுப்புறம்..."

பேருந்தின் உள் சாலையைப் பற்றி எழுந்த சல சலப்பு ஓய்ந்தபாடில்லை. வழி நெடுக பள்ளம். பேருந்து விழுந்து எழுந்து குலுங்கியபடியே சென்று கொண்டிருந்தது. பேருந்து பள்ளத்தில் விழுந்து எழுந்து குலுங்கும் ஒவ்வொரு முறையும் உயரமானவர்கள் தலையில் இடித்துக் கொள்வார் கள். இருக்கையில் அமர்ந்து இருப்பவர்களுக்கும் மிதமாக வலி உண்டாகும். சிலர் அதைப் பொறுத் துக் கொண்டு மௌனமாய் இருப்பது உண்டு. சிலரோ வாயைத் திறந்து யார்யாரையெல்லாம் திட்ட வேண்டுமோ அவர்களையெல்லாம் திட்டுவ துண்டு.

கன்னியப்பனைப பார்த்து அந்த வெள்ளைச் சட்டைக்காரர் மெதுவாய்க் கேட்டார், "என்னங்க இது இந்த ரோடு இவ்ள மோசமா இருக்குது.. இதல தெனமும் போனா அவ்வளதான். மனுசன் சீக்கிரம் செத்துடுவான்..."

அந்த நபரின் பேச்சை உள்வாங்கிக் கொண்டு மெதுவாய்ப் பேச ஆரம்பித்தார் கன்னியப்பன்.

"ஊ... இன்னாப்பா பண்றது.. எங்க தலயெழுத்து இதான்னு வுட்டுட்டம்..."

"பெட்டிஷன் எதுனா கொடுக்கறதுதான ?"

"அத ஏம்மபாக் கேக்ற ? எல்லாக் கய்தக்கிம் எல்லாம் எய்திப் போட்டாச்சி. ஒருத்தனக் கேட்டா இந்த ரோடு பஞ்சாயத்து இல்ல 'ஐவேஸ்'ன்றான். அவனக் கேட்டா இது ஐவேஸ இல்ல, பஞ்சாயத் துன்றான். இங்க எந்த அதிகாரியும் சரி கெடையாது. இந்த ரோட்ட போடச் சொல்லி எவ்வள போராட் டம் எவ்வள மறியல் நம்மூர் பசங்க இதுக்கோசரம் ஜெயிலுக்குக்கூடப் போயி வந்துட்டானுங்க. அப்ப வும் ஒரு மாத்தமும் இல்ல. கடைசியா ஒருத்தன் சொன்னான். இந்த ரோடு போட எண்பது லட்சம் செலவாகும். ஆனா இப்ப அரசாங்கம் ஒதுக்கன நிதி அறுபது லட்சந்தான். இன்னும் இருபது லட் சம் நிதி இல்லயாம். அந்தப் பணம் வந்த பின்னாடி ரோடு போடற வேலையத் தொடங்குவோம்ன்னான். ஏம்பா இன்னான்னமோ செலவு செய்துங்க, இந்தக் கய்திங்களால ரோட்டுக் கோசரம் இருவது லட்சம் சேக்க முடியாதா ? ங்கோத்தா எங்களுக்கு எல லாம் கததான் சொல்றானுங்க. நாங்களும் தல எய்த் தேன்னு இந்த ரோட்ல வந்து போயிக்னு இருக்க றம்..."

பேருந்து குறைவான வேகத்தில் சென்ற போதும் குலுங்கியபடியேதான் சென்றது. குலுங்கல் நிறகவே இல்லை. புழுதி பறந்து அனைவரின் மூக்கின் உள்ளும் நுழைந்தது. சிலர் தும்மினார்கள். சிலர் மூக்கை மூடிக் கொண்டார்கள். சில வயதான வர்களுக்கு மூச்சடைப்பு உண்டாவது போல் இருந் ததனால் பெருமூச்சு வாங்கினார்கள். இது எதையும் உணராமல் கிடந்தது அந்தப் பள்ளம் நிரம்பிய சாலை. சாலையைப் போலவே உணர்வு எதுவும் இல்லாமல் அரசு இயந்திரம் அரசு எல்லாம் பொது மனிதர்களின் மேல் கரிசனம் இல்லாமல் புழுதி நிரம்பிய இந்தச் சாலையைப் போலவே கிடக் கின்றன.

பேருந்தின் லொட லொட சத்தம் உள்ளே இடி பாடுகளிடையே சிக்கிய மனிதர்களாய்க் கூக் குர லிடும் பயணிகளின் சத்தம் அத்தனையும் ஒன் றாய்ச் சேர்ந்து கிராமத்தின் அமைதியை மொத்த மாய்க் கெடுத்தன.

கன்னியப்பன் தன் உடமைகளோடு இறங்கத் தயாரானார். வெள்ளைச் சட்டை மனிதரைப் பார்த்து ஒரு புன்னகை பூத்தார். உமா மகேஸ்வரி யின் கன்னத்தைக் கிள்ளி தன் பையில் இருந்த ஒரு மஞ்சள் வாழைப் பழத்தினை எடுத்துக் கொடுத்தார். அவள் புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள்.

புழுதி பறக்கச் சென்ற பேருந்து நின்றது. சல சலப்புடனே படிக்கட்டை மறைத்து நின்றவர் களை இடித்துத் தள்ளி இறங்கினார் சிலர். கன்னி யப்பனும் தன் உடமைகளோடு இறங்கினார். கன்னியப்பனையும் அவரோடு ஏழெட்டு உள்ளூர் மனிதர்களையும் இறக்கி விட்ட பேருந்து புகை கக்கி புழுதியைக் கிளப்பிப் புறப்பட்டது. இப் போதும் பேருந்தில் கூட்டம் குறையவே இல்லை. எப்படியும் எழுபது முதல் எண்பது நபர்கள் இருக் கக் கூடும். அப்படியே அப்பிக் கொண்டு நின்றது கூட்டம். அத்தனை பேரும் கோவிலுக்குப் போகும் கூட்டம்தான்.

கனனியப்பன் இறங்கியவுடன தந்தையின் மடியை விட்டு நகர்ந்து சன்னல் ஓரமாய் அமர்ந்து கொண்டாள் சிறுமி. சாலைப் பள்ளங்கள் ஒவ்வொன்றையும் கடக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் கூக்குரல் பேருந்தின் உள்ளே ஒலிக்கத் தொடங்கியது. பேருந்து மிதமான வேகத்தில்தான் சென்றது. எதிரே எந்த வாகனமும் வருவது அரிது. அதனால் பேருந்தின் வேகத்தைக் கொஞ்சம் அதிகமாக்கினார் ஓட்டுனர். வழி நெடுகப் பேருந்து புழுதியை வாரிக் கொட்டியபடியே வந்து கொண்டிருந்தது. சன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்த உமா மகேஸ்வரி வாழைப்பழத்தைப் பிய்த்துத் தின்ன ஆரம்பித்தாள். அவள் தின்னும் பழத்திலும் புழுதி அப்பியது. பேருந்தில் பலர் கண்ணையும் மூக்கையும் மூடிக் கொண்டனர். சாலை ஓரத்தில் இருந்த வேலிக்காத்தான் மரங்களின் கிளைகள் சிலரின் முகங்களின் அடித்தது. படிக்கட்டில் இருந்தவர்களின் முதுகைக் கிழித்தது. இப்போதும் பேருந்து மிதமான வேகத்தில்தான் சென்று கொண்டிருந்தது. ஒரு குறுகிய சாலை வளைவில் பேருந்தை ஓட்டுனர் திருப்ப முயன்றார். கொஞ்சம் பெரிய சாலைப் பள்ளத்தில் பேருந்து திடீரென வலது பக்கமாய்க் குப்புறக் கவிழ்ந்தது. படிக் கட்டில் தொங்கியபடி வந்தவர்கள் எல்லாம் வேலிக்காத்தான் மரத் தோப்பில் தூக்கி வீசப் பட்டனர். அந்த இடம் மொத்தமும் மரண ஓலத் தாலும் ரத்தத் தாலும் நிரம்பியது. ஒரு கிலோ மீட்டர் தூரத்தையும் தாண்டி ஒலித்தது. உயிருக்குப் போராடியவர்களின் ஓலம், கூக்குரல் கேட்டு ஊர் மக்கள் அனைவரும் ஓடி வந்தனர். ரத்தச் சகதியானது அந்த நிலம். எத்தனை பேர் பிழைத்து உயிரோடிருக்கிறார்கள் என்று யாராலும் உறுதியாய்ச் சொல்ல முடியவில்லை. ஒருவர் மேல் ஒருவர் ஒட்டியபடியே வந்ததாலும் கவிழ்ந்த பேருந்து வறண்ட வயல் பள்ளத்தில் விழுந்ததாலும் உயிர்ச் சேதம் அதிகமாக இருக்கக் கூடும்.

வீட்டில் இருந்த கன்னியப்பன் ஓடோடி வந்தார். மேல்சட்டை இன்றி வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வேகமாய் வந்தவர் விபத்து நடந்த இடத்தில் மௌனமாய் நின்றார். அவருக்குள் பதைபதைப்பு. அவர் உடலில் நடுக்கம். ரத்தச் சகதியில், தன்னை அரவணைத்து உட்கார இடம் கொடுத்த அந்த வெள்ளைச் சட்டை மனிதரையும் சிறுமி உமாமகேஸ்வரியையும் தேடினார்.

உள்ளூர் இளைஞர்கள் அனைவரும் வேகமாய்ச் செயல்பட்டனர். பேருந்தின் உள்ளே சிக்கியவர்களை மீட்க, கவிழ்ந்த பேருந்தின் ஜன்னல் மீது நின்று உள்ளே கிடப்பவர்களை வெளியே எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஒருவன் உள்ளே ஒயர் கூடையில் கத்திக் கொண்டிருந்த காவ சேவலை எடுத்து உயிருடன் பறக்க விட்டான். வெளியே கெக்கோ, கெக்கோ என்று கத்தியபடி ரத்தச் சகதியில் மிரட்சியோடு அலைந்தது சேவல.

அந்தச் சன்னலோரத்தில் வெள்ளைச் சட்டை மனிதர் சிகப்புச் சட்டை மனிதராய்க் கிடந்தார். அவரருகே உமாமகேஸ்வரி தலை இல்லாத முண்டமாய்க் கிடந்தாள். சன்னலோரமாய் உட்கார்ந்ததால் அவளின் தலை துண்டிக்கப் பட்டிருந்தது. அவள் கையில் பாதி தின்ற மஞ்சள் பழம் சிவப்பாய்க் கிடந்தது. அவளின் தலையைத் தேடினார் கன்னியப்பன. வேலிக்காத்தான் முட்புதரில் கிடந்தது அவளின் தலை. அதன் அருகே சென்று அதனைப் பார்த்தார். உதட்டோரம் வாழைப்பழம் தின்ற அடையாளம். கோவிலுக்கு முடி கொடுக்க வந்தவள் தலையே இல்லாமல் கிடப்பது கண்டு மயங்கி விழுந்தார் கன்னியப்பன்.

கன்னியப்பனை உள்ளூர் இளைஞர்கள் தூக்கிக்கொண்டு போய் வீட்டில் சேர்த்தனர்.

அந்த ஊரெங்கும் ரத்த வாடையோடு மரண வாடையும் சேர்ந்தே வீசியது. ஊர் முழுவதும் மயான சோகம். அன்று இரவுக்குள் செய்திகேட்டு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் விபத்து நடந்த இடத்திற்கு வந்து தொலைக்காட்சிக்கும், நாளிதழுக்கும் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தனர்.

மயங்கி விழுந்த கன்னியப்பன் மறுநாள் காலை எழுந்தார். ஊர் இன்னமும் அந்தத் துயரத்தைச் சுமந்து கொண்டிருந்தது. ஊர் மக்கள் ஆங்காங்கே நின்று கும்பல் கும்பலாய் எதையோ பேசிக் கொண்டிருந்தனர்.

கன்னியப்பன் எட்டி டீக்கடைக்கு வந்து செய்தித்தாள் பார்த்தார். செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தியே நேற்றைய விபத்துதான்.

**"ஐம்பத்து நான்கு பேர் பலி, உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு அரசு தலா இரண்டு லட்சம் வீதம் ஒரு கோடியே எட்டு லட்சம் நிவாரணநிதி".**

■■■

**சூரியமித்திரன்**

**கவிதைகள்**

## இனி வெளிச்சம் வரும்

சின்னச் சின்ன
பொய்கள் கூறி
சித்திரத்தை விற்கிறோம்...

வாங்கின வேகத்தில்
அது சாயம் போனது...

வெறும் கிறுக்கல்கள்
மட்டும்
மிச்சமாய் பிரேமில்...

வாழ்க்கையே
தினமும் இருண்ட
பாதையில் பயணித்து...

கண்ணிருந்தும்
குருடார்களாய்
பிரச்சினை யானைகளைத்
தடவித் தடவி
கதை சொல்லுகிறோம்...

கடைசி வரைக்கும்
நிஜயானை தூரத்தலில்
நம் நிமிடங்கள் அனுமானிக்கவே
முடியாத நிலையில்...

பற்றுக்கோடாய்
ஒன்று மட்டும்
இனி வெளிச்சம் வரும்...
வராமலும் போகும்...

## பங்களிக்காமலே...

அழைப்பிதழில் பெயர்...
சின்னதாய் ஒரு கிக்...

மனம் சந்தோசப்பட்டாலும்
அவசியம் போய் ஆகணும்...

படைப்பைத் தந்தாகணும்...

மூளை நாட்குறிப்பில்
இது குறித்து பதிவாகும்
"சிறப்பாய் எழுதணும்..."

குறிப்புகள் எடுக்க
நூலகம் போகணும்...

திட்டமிடல்கள்
தடபுடலாய் நடக்கும்...

என்றும் காலைச் சுற்றியிருக்கும்
பிரச்சனைகள் அரிப்பு எடுத்து
நினைவூட்டும்...

கடினப் பணியினூடே
நாட்குதிரை
விண்வெளி ஓடத்தில்
விரைந்து பயணிக்க...
கூட்டநாள் நெருங்கிவிடும்...
கை பிசைதலில்
இதயம் மசாஜ் ஆகும்...

எதையும் தயாரிக்காமலே
எப்படிச் சமாளிக்கலாம்...
எச்சில் நீர் கொப்புளித்து
ஒரு ஓரம் நுரை தங்கும்

அசைபோடலில்...
கூட்டத் தலைவர் அடுத்தது நீதான்
சிக்னல் வரும்...
தயாராகாததைத் தயங்கித் தயங்கி
எதிர் சிக்னலில் அவருக்குப் புரியவைத்து...
பங்களிக்காமலே பங்கேற்கும் வித்தை...
பலமாதங்களாய்த் தொடருது...

## இனி வெளிச்சம் வரும்!?

1

இதயமெலாம்
கொழுந்திட்டெழும் தீ
இச்சிறியவனின்
சிந்தனைக்ககப்படாமல்
கண்ணாமூச்சியாடும்
வார்த்தைக் காலம்!

வாழ்க்கை
எங்கே எங்கேயென்று நான்தேட
இங்கே இங்கேயென்று
வாழ்க்கை விளக்கியது

வேண்டாம் வேண்டாமென்று வாழ்க்கையை
விரட்ட
வந்தேன் வந்தேனென்று
குழந்தையாய் அணைத்தது!

பணவேட்டையெனும் மாபாரதப் போரில்
கல்வியறிவாளர்கள் கொல்லப்பட்டனர்
அதில் சரஸ்வதி சிந்தனையிழந்தாள்

சிறுபக்கத்தில்
அடங்கிய வார்த்தைகளை
ஒழுங்காய் மனப்பாடம் செய்து
வெற்றுத்தாளில்
அழகாய் வரிசைப்படுத்தி
அபாய திறத்தில் மதிப்பெண் தந்து
தாள் நிரப்புவதில்
சிறந்தவனாகத் தேர்வு செய்தனர்!

அடுத்து என்னவென்று நான் வினவ
வெளியே விரல் நீட்டினர்!
திக்கற்றவனாய்
இன்றைய இளைஞன் நிலை

பணச் சிம்மாசனத்தில்
இன்றைய கல்வி நிலை
வாழ்வென்னும் சூனிய சமூகத்தில்
பணத்தேரொன்று போதுமா?

அழகாய்ப் பக்குவப்படுத்த
அப்பாதை உதவுமா?
வரலாற்றைப் படிப்பது ஒரு ரகம்
வரலாற்றைப் படைப்பது
மற்றொரு ரகம்!

ஒருவர் இருவரென்று
விரல் நீட்டியது போதும்
இனி கூட்டமாய்ச் சாதிக்க வேண்டும்

நாம் அனைவரும் சாதிக்கும்
அந்த வெள்ளி வெளிச்சம்
வருமா? வருமா?
என்ற கேள்வியை இக்கணமே நிறுத்தி
வரும் என்று சூளுரைப்போம்

பூவால் அடிப்பது மென்மை
வாளால் அடிப்பது வன்மை

'பூ'ச்சிந்தையால் மனிதர்களைக்
கூச்சவும் செய்வோம்
'கூர்'சிந்தையால்
சிந்தையைத் தட்டியும் எழுப்புவோம்!

அச்சமயம் காலங்காலமாய் மூடிக்கிடக்கும்
கதவுகளை
வாளேந்தி உடைக்கச் செய்வோம்!

ஐயமாய்த் தெரியும் வெளிச்சம்
வாழ்வின் மையமாய் விளங்கும்
வெளிச்சம் வரும்! வரும்!! வரும்!!!

**- சு. பராசரன்**
52, வைகுண்டபெருமாள் கோயில் தெரு,
காஞ்சிபுரம்.

## இனி வெளிச்சம் வரும்!?
## 2

இருளுக்குப் பின்னால் வெளிச்சம் வரும்
இயற்கை இதற்கு உறுதி தரும்
குளிருக்குப் பின்னால் வசந்தம் வரும்
பாலை நிலத்திலும் சோலையிருக்கும்

தோற்ற மன்னரும் பாசறை கண்டு
மீட்டு அரசமைத்த வரலாறு உண்டு
ஏங்கிய இதயத்தில் இழையோடும் நம்பிக்கை
பந்தலாய் கூரையாய் ஆவது உண்டு

ஏழையின் வாழ்வில் இறைவனின் தூது
எதிர்காலம் எனும் விளக்கை ஏற்றிடும்போது
இயற்கை தந்த செல்வப் பெருக்கை
எல்லோரும் பெறும் காலம் எப்போது?

இயன்றவர் எல்லோரும் உழைத்திடும் போது
இயலாதவருக்குப் பிறர் ஈந்திடும்போது
தானே தருவது தானம்
தட்டிப் பறிப்பது வழிப்பறி

வியர்வை சிந்தினால் கிடைப்பது கூலி–
ஆனால்
பசித்தவன் காதுக்கு இசைகூடக் கசக்கும்
வானமே கூரையாய் வையமே இல்லமாய்
வாழும் அனாதைகளுக்கோ

மனித நேயம் மட்டுமே புரிகின்ற உறவாகும்
துன்பப் புயலில் சிக்கித் தவிக்கும்
இவர்களைப் போன்றவர்களுக்கு
மனம் கசிந்த மானுடப் பார்வையும்,

கண்ணோட்டமுமே கரைசேர்க்கும்
கலங்கரை விளக்கமாகும்
இதயம் இரங்கினால்
இனி வெளிச்சம் வரும்

- **ம.இராமரத்னம்**
3சி/14, சேலை ராமசாமி தெரு,
காஞ்சிபுரம்.

## இனி வெளிச்சம் வரும்!?
## 3

மூத்திரச் சந்து
மூன்று தெருவிற்குப் பொது
ஜிகினா மேடையும்... டாடா சுமோக்களும்...
போக்கஸ் பளபளக்குது...
தெருவாசிகள் பாடு திண்டாட்டம்.

கட்டிங்கிற்க்கே கஷ்டப்பட்டவன்
'புல்' பாட்டிலோடு குடித்தனம்...
பாக்கெட் சாராயப் பாட்டி எல்லாம்
பாரின் விஸ்க்கிக்குக் கட்சித் தாவல்

குக்கிராமத் தெருவிளக்கும்
திருவண்ணாமலை தீபம்தான்

பிரிண்ட்டிங் மிஷினும
பெயிண்ட்டிங் பிரஷ்சும்
மைக் செட்டும்
முதலாளிக்கு வெளிச்சம் தரும்.

ஓட்டுக்கு நூறு
ஒவ்வொருவருக்கும் வெளிச்சம் தரும்
கண்டிப்பாக வெளிச்சம் வரும்
இனி தேர்தல் முடியும்வரை...

- **தி. நிவாஸ்**
பல்லாவரம்,திருவண்ணாமலை மாவட்டம்.

**"இனி வெளிச்சம் வரும்"** என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த மூன்று கவிதைகளும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசாக ரூபாய் 500, 300, 200 பெறுகிறது. பரிசுத் தொகையை வழங்கியவர் **கவிஞர் முல்லை அமுதன்.**

**காற்றுவெளியில் கிடைக்கும் நூல்கள்**

**செவ்வானம்** – செ.கணேசலிங்கன், **குறுநாவல்கள்** – கேடானியல், **யோகம் இருக்கிறது** – குந்தவை, **இசைக்குள் அடங்காத பாடல்கள், முடிந்தகதை தொடர்வதில்லை** – முல்லை அமுதன், **வெண்சங்கு** – கனக.செந்திநாதன், **அரைநிமிடநேரம்** – மகேஸ்வரி சிவப்பிரகாசம், **வானலைகளில் எங்கள் கவிதைகள் (பாகம் 1, 2)** – வண்ணைதெய்வம்.

**இரவல் நாட்டுக் கனிவும்**
**இருபது வருட நிமிர்வும்...**

**பி**றந்த மண்ணில் விடிவை மறந்து
அன்னிய நாட்டில் அடைக்கலம் கேட்டோம்!
உச்சி மலையின் தேனை நினைத்து
ஈச்சம் பழத்துத் தேனை இழந்தோம்!

குளத்துக் குளியல் சுதந்திரம் கேட்டு
குளியலறை சுதந்திரம் பெற்றோம்.
இரவல் நாட்டில் தலைகுனிவினை ஏற்று
அகதி என்ற பெயரினில் நிமிர்ந்தோம்!

இதுதான் நிமிர்வா தம்பி! இல்லை
இன்னும் ஏதன் இருக்கா? இருக்கா?

தாய்மண் துயரை அறிந்து
தயங்கா உணர்வினில் கரமது நீட்ட
எங்கள் பசியைத் தானே மறந்து
உங்கள் பசிக்கு உதவுவோம் என்ற
உள்ளத்துறுதி நெஞ்சுக்குள் பிறந்தால்
அகதி பெயரால் குனிந்த தலையும்
அன்பின் உறவால் நம் தலை நிமிரும்!

இதுதான் தம்பி தலைகுனிவில் கிடைத்த
உண்மை நிமிர்வு இதுவே என்பேன்!

மேட்டு நிலத்து பயிர்கள் வளர
மேகம் தெளிக்கும் மழை நீர்போல
தாய்மண் மக்கள் வாட்டம் துடைத்தால்
உனக்கு மழைபோல் பெருமை
குனிவிலும் நிமிர்வே...!

இல்லை அன்னிய நாட்டுப் பஞ்சணை
மெத்தைப் பத்துக்காசு பால் பழம் முட்டை
தாய்மண்ணை மறந்து மக்களை மறந்து
தான் தன் குடும்பம் பெரிதென நினைத்தால்
குனிந்த தலையும் குனிந்ததுதான்

நிமிர்த்திட எவருமிலர்
நினைத்திடமாட்டார் சிந்தி தம்பி சிந்தி!
சிந்திக்க மறுத்தால் நீ ஒரு மந்தி!

ஆட்டிப் படைப்போர்க்கு
பாடை செய்வோம்.
தமிழன் ஆண்டிடத் தான்
ஒரு நாடு செய்வோம்
தமிழ் அன்னை கை அடிமை விலங்கினை
உடைத்தெறிவோம்
அதை ஆக்கிடும் தலைமைக்கு
கரம் கொடுப்போம்
என்ற உணர்வோடு
அகதி வாழ்வைப்போம்

குனிவிலும் நிமிர்வினை
சேர்த்தணைப்போம்.
தாய் மண்ணின்
விடுதலை பெற்றெடுப்போம்.

சந்ததி சுதந்திரத் தமிழராய்த்
தலை நிமிரவைப்போம் என்பதை
உறுதியாய்த்தானும் சொல்வோம்

சிந்திக்கும் கவிதை இது
புரிந்து தெரிந்திட வேண்டியது

இரவல் தேச வாழ்க்கைக் குனிவும்
இருபது வருட வாழ்வின் நிமிர்வும்
சிந்திக்க வேண்டிய தலைப்பு
செயலாற்ற வேண்டிய பொறுப்பு இங்கே...?

பேசுங்கள்! பேசுங்கள் பேசி முடியுங்கள்!
நான் சொன்னதைப்பற்றி முடிவெடுங்கள்.

உங்கள் அரங்கு உங்கள் சக்தி
எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசுங்கள்.
பேசி முடிவெடுங்கள்.

உங்கள் வாக்கு உங்கள் நாக்கு
யாரைப்பற்றியும் பேசுங்கள்
நான் சொன்னதைப் பற்றியும் சிந்தியுங்கள்

நீங்கள் அகதியாகப் பிறந்தவர்களல்ல
நீங்கள் அகதி ஆக்கப்பட்டவர்கள்

தெரியாமல் வந்து சேற்றில் விழுந்தவர்கள்
உங்கள் பிள்ளைகள் அகதிகளுக்கு பிறந்தவர்கள்
அவர்கள் உங்களால் அகதி ஆக்கப்பட்டவர்கள்
என்பதைப் பற்றியும் பேசுங்கள்,
முடிவு செய்யுங்கள் செய்து முடியுங்கள்...!

உங்களின் விடுதலை
உங்கள் பிள்ளைகளின் சுதந்திரம்
இதைப்பற்றிப் பேசும் உரிமை
உங்களுக்கு உண்டு.

உங்களது கையில் வர்ணச் சாயம்
உங்களது வீட்டுச் சொந்தச் சுவர்கள்
நீங்கள் எதுவும் கீறலாம்,
எதுவும் கீறுங்கள்...

நாங்கள் அகதிகள்
கோடிபல சேர்க்க ஓடிவந்தவர்கள்
இதுவரை கோடிகள் சேர்க்கவில்லை.
ஆம் ஆம் சேர்த்தோம் கோடி நோய்கள்
அதனால் சிந்தியுங்கள்
தாய் மண்ணைப்பற்றி
எம் எதிர்காலச் சந்ததிபற்றி

உங்கள் பிள்கைள்
நாளை கேள்வி கேட்பார்கள்
உங்கள் பிணங்களைக்கூட கீறி எடுத்து
கூண்டில் நிறுத்துவார்கள்!

தாய்மொழி தெரியாத கோபத்தில்
விளக்கம் கேட்பார்கள்!
விமர்சனம் செய்வார்கள்

செய்வார்கள் மண் பற்றறுத்த மனிதர்களாய்
தமிழ் பேசத் தெரியாத தமிழர்களாய்

தமிழ் தெரியாத தமிழர்களாய்
தமிழ்தெரியாத தமிழர்களாய்
என்பதைப் பற்றியும் பேசுங்கள்,

பேசிப் பேசி சரியான முடிவெடுங்கள்...!
சரியான முடிவெடுங்கள்.

**- வேலணையூர் பொன்னண்ணா**
**டென்மார்க்.**

*நல்ல கவிதைகள் அடங்கிய*
*160 பக்கங்களில்*
*வெளிவந்துள்ளது.*

கனிவுமதியின்

**"கட்டாந்தரை".**

வெளியீடு :

**கனிதா,**
15, காவியா ஒழுங்கை,
மட்டக்குளி, கொழும்பு–15,
இலங்கை.

---

*படைப்பாளிகள் அறிந்த*
*படைப்பாளிகளின் தொகுப்பாக*
*வெளிவந்துள்ளது*
**"பரதேசிகளின் பாடல்கள்"**
கவிதைகள்)

**வெளியீடு :**
அப்பால் தமிழ்
kiplan@appal.tamil.com

---

## தொலைவில்

நறுக்கெனத் தொடரும்...
இறுக்கமாக ஆழ இறங்கியும்
அவ்வப்போது ஒத்தடம் கொடுக்கவும்
புலம் பெயர் வாழ்வியலின்
சொல்லாத மெல்லிய சோகமும்...
வரிக்குவரி நல்ல கவிதைகளை
வாசித்த திருப்தி...
வாசுதேவனுக்கு கைவந்திருக்கிறது.

பதிப்பில் கூடிய கவனம் எடுக்கப் பட்டிருக் கிறது. ஈழத்தவரின் எழுத்துக்குக் கைகொடுப் பதில் காலச்சுவடு கவனம் செலுத்தி வரு கிறது. இந்திய விலை 60.00 ரூபாய்.

*வெளியீடு:*

**காலச்சுவடு.** 669,கே.பி.ரோடு,
நாகர்கோவில்–629001, இந்தியா.

ஹைக்கூ கவிதைகள்

**ஔவை பாங்கி**

ஜேர்மன்

**ப**த்து வயதுச் சிறுமி
பணக்கார வீட்டில் குழந்தை
ஏழைக் குடிலில் செவிலி.

சிறுவர்தின விழா
நகரெல்லாம் கோலாகலம்
கடலை வியாபாரத்தில் சிறுமி

மீளாத் துயிலில் ஒருவர்
எந்த மதத்தில் அடக்கம்
மரண வீட்டில் கலவரம்.

திருமணப் பதவிக்கு
நல்ல அனுபவம் உண்டு
விதவையின் விண்ணப்பம்.

மணம் புரியாது இல்லறம்
விவாகரத்துச் செலவு மிச்சம்
மேனாட்டார் சிலர்.

போற்றி வளர்த்தல்
திட்டித் தீர்த்தல்
இரண்டுக்கும் ஒரே நாக்கு.

மௌனஞ்சலி வணக்கம்
கணீரென்ற சத்தம்
வீறிட்ட குழந்தை.

சமய பேதங்கள்
தீவிரச் செயல்பாடுகள்
நோக்கம் ஒன்றே.

இன்பமும் துன்பமும்
விரிந்தும் விரியாததுமான மலர்கள்
வாழ்க்கை மரத்திலே.

பெண்ணிலைவாதியின் பேச்சு
பெண் ஒரு இச்சைப் பொருளா?
மனைவி அடிக்கடி கருக்கலைப்பில்.

பாலூட்ட நேரமில்லை.
இயந்திரம் மூலம் கறப்பு
புட்டியில் தாய்ப்பால்.

மரம் வளர்ப்போம்
ஓயாத கோஷம்
வேலையோ மரக்காலையிலே.

மெல்லிய குறட்டை
விழிக்க வைத்தாலும் இனிமை
சேய்முகம் பார்த்த தாய்மை.

மேனாட்டுக் குடும்பங்கள்
விஞ்ஞானப் பெருக்கங்கள்
உறவுகளில் விரிசல்கள்.

ஓடியோடி உழைப்பு
குடும்பத்தில் செழிப்பு
தாய்ப்பாசத்துக்கு தவிப்பு.

விதவை தபுதாரன் மணம்
கழுத்தில் மங்கல நாண்
சுமங்கலி வரமாம்?

விதைத்தவ வளர்த்த பயிர்கள்
அறுவடை செய்ய முடியாத விவசாயி
பிள்ளைகளும் பெற்றோர்களும்.

# இராஜவல்லிபுர இராஜாளியே

வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்ததினால்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்ட
வல்லிக்கண்ண வணக்கம்!

வானுலகில் நின்னை
வள்ளுவனும், கம்பனும்
இளங்கோவும் பாரதியும்
வந்து வரவேற்றனரோ?

இராஜவல்லிபுரம் ஈன்றெடுத்த
இலக்கிய இராஜாளியே...
புதுக்கவிதைக் கடலைக்
கடைந்தெடுத்த
தேவ அமுதம் நீ.

விண்ணிருந்து நட்சத்திரங்கள்
உதிர்ந்ததைத்தான் பார்த்திருக்கின்றோம்
கரிசல் மண்ணிலிருந்து
ஒரு நட்சத்திரத்தை
விண்ணுக்கு அனுப்பி இருக்கிறோம்
விண்ணுலகே வந்து பாராட்டு.

சிற்றிதழ்களின் சிநேகிதனே
சிறுபிள்ளைத்தனமாய்
ஒரு எதிர்பார்ப்பு - இனிமேல்
ஆகாயத்திலிருந்தும்
அஞ்சலட்டைகள் வரக்கூடுமோ?

- பேனா. மனோகரன்.
மதுரை.